உ

குமரன்றுணை.

அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# செந்தூரம் 300.

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்,

மூ. குழந்தைவேலுப்பிள்ளையவர்கள்

ஓலையேட்டுப்பிரதியின்படி

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று;

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார்

அவர்களாற் றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1917

இதன் விலை] — [அணா 10.

உ

கடவுள் துணை.

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

# செந்தூரம் நூறு.

வெண்பா.

காலுந் தலையுங் கலந்துநடு வாகிநின்று
மேலுந் துரியம் விளங்குமே—காலாம்
வயித்தியமுந் நூலும் வழங்கவே சூத்திரம்
பயிற்றுங் கணேசனருட் பார்.

## காப்பு.

பூதலத்தில் தென்பொதிகை தன்னில்வாழும் பூரணமே யென்குருவே சிவமேஅய்யா, மாதவத்தால் அஷ்டசித்தி யெட்டும்பெற்ற வரிசையிலே வயித்தியநூல் வகையாய்ச்சொல்வேன், போதகத்தின் முகத்தானைக் கடைக்கோட்டானைப் பூதலத்தில் நிறைந்தானைப் புதல்வன்றன்னை, சாதகமாய் மனமடங்கி யறிவிற்கூடித் தற்பரனாய் நின்றகண பதிகாப்பாமே. 1

## நூல்.

கணபதியின் பதத்தாலே கீழ்முக்கோணம் கரையடங்காப் பிறப்பறுப்பான் கடவுளான, கணபதியைக் குண்டலியிற் கண்டுதேறிக் கனலெழுந்து வாய்வுவந்த புரியஷ்டத்தால், கணபதியே பிறப்பிறப்பு ஆண்பெண்ணாகிக் கரைகொள்ளா நாதமொடு விந்துவாகி, கணபதியைப் பெற்றெடுத்த விந்துவாலே கழறுகின்ற விருகுறியுங் காணுகாணே. 2

காணப்பா புரியஷ்ட மெட்டினோடு சலந்துதப்பா பூரணத்தான் கண்டத்தோடே, தோணப்பா யிடகலைக்குச் சோடசமேபாயுஞ் சுகமாகப் பிங்கலைக்குப் பன்னிரண்டாம், பேணப்பா இதில்விடட குறையினாலே பெண்ணோடு புருஷனங்கே சேரும்போது, ஊணப்பா பிரணவங்கொண் டுயர்ந்த சென்மம் உத்தமனே யிதிற்பிறந்த நோய்கள்தானே. 3

தானென்ற சபையெழுத்துத் தொண்ணூற்றாறும் தத்துவமா மிவர்களுக்குப் பஞ்சகர்த்தாள், தானென்றே கொண்டணைக்குந் தசமாம்வாய்வு சாதகமாய் பரனுட தத்துவந்தான், தானென்று நின்றவிடம் வாதபித்தஞ் சார்ந்தசிலேற் பனத்தோடு மூன்றினாலே, தானென்ற வியாதியெல்லாம் வளருமப்பா சடலமெல்லாம் கோயிட்ட கூடுதானே. 4

கூடகெட்டிக் குடியிருந்த குறும்பரேகேள் கொள்ளையிட்டார் கற்பமெல்
லாங் கூறாய்த்தின்ன, நாமெப்போ தொன்றோடே யொன்றுவேறாய் நடை
கொடுக்க மாட்டாமல் கற்பந்தின்றால், தேமெப்போ சிவயோகஞ் செய்ய
வேணும் தெளிவாக வாதசித்தி காணவேணும், ஆமெப்போ காயசித்தி பண்
ணும்போது அதற்குமுன்னே யயமிருந்து தட்டுறேனே. 5

தட்டுறே னென்பதற்குக் கற்பங்கேளு சாதகமாய்க் காந்தமது பலந்தா
னஞ்சு, தெட்டிறதோர் வெள்ளையது பலந்தானொன்று திரமாகக் காரமது
பலந்தானொன்று, ஒட்டிறதோர் சாரமது பலந்தானொன்று உத்தமனே
தாளகந்தான் பலந்தானொன்று, பட்டிடவே பூநீறு கழஞ்சியொன்று பாங்
கான வெண்சருவெள் ளொருக்கம்பால்வாரே. 6

வார்த்துவைக்கச் சலமாகும் சலத்தைவிட்டு மாட்டுவாய் பதினொன்று
மருந்துங்கூட்டி, சேர்த்துநீ யரைத்திடுவாய் ரெண்டுசாமந் திரமாகப் பின்
பதனை வில்லைசெய்து, போர்த்திடுவாய் வெய்யிலிலே உலர்ந்தபின்பு புக
ழான மூசையிலே யிட்டுமூடி, காத்திடுவாய் மேலோடு கொண்டுமூடிக்
கைமுறையாய் சீலைமண்ணுங் கணக்காச் செய்யே. 7

செய்யப்பா உலைமுகத்தில் திருத்திரெண்டு திரமாக ஊதிவிடு அழுகு
மட்டும், பையப்பா வெடுத்ததனை யாறவைத்துப் பாங்காகப் பின்பொருககா
லழுகவூது, மெய்யப்பா பின்பதனைக் குகையில்வைத்து விளங்கவே பின்
பொருக்கால் நன்றாயூது, அய்யப்பா காந்தமது தாராப்போல்நிற்கும் ஆகா
கா காந்தச்சத் தருமைதானே. 8

அருமையென்ற காந்தத்தைக் குகையில்வைத்து அப்பனே மூன்றுதரம்
அழுகவூதிற், பெருமையென்ற காந்தமது சத்தாய்ப்போகும் பேச்சேது
சூதமொரு பலத்தைத்தாக்கி, கருமையென்ற காந்தமது சோதித்தேறக் கரு
வளையில் வீரமுடன் காரங்கூட்டி, உருமையென்ற சாரமது பழச்சாற்றா
லரட்டி யுலர்த்துவாய் பணம்போலே வில்லைசெய்தே. 9

வில்லைசெய்த மருந்தெல்லாம் சமனாய்க்கொண்டு மீறியதோர் காந்தமது
உருகும்போது, சொல்லுவேன் சத்துக்குச் சமனாய்த்தாக்கு துடியாக
வொவ்வொன்றாய்க் கொடுக்கவாங்கும், அல்லவே சமனாகத் தாக்கிப்பின்பு
அப்பனே ஓடுகொண்டு மூடிக்கொண்டு, வல்லதொரு குகையழுக நன்றா
யூது மகத்தான காந்தமது வங்கந்தானே. 10

தானென்ற காந்தமது ஈயமாகச் சாஸ்திரமெல் லாம்படித்தா யருமை
யென்றே, நானென்ற ஆணுவத்தால் வெளியிற்போட்டேன் நாட்டாதே
கள்ளரென்ற பிள்ளைக்கெல்லாம், வானென்ற ஈயத்தைப் பதனம்பண்ணு
வண்மையாய்த் தேவியுட நாதங்கேளு, வேனென்ற அயப்பொடிதான் பலந்
தானஞ்சு வெள்ளையொடு தாளகமுஞ் சூதங்கூட்டே. 11

கூட்டியே சாரமொடு காரந்தன்னைக் குறியாக வதக்கியொரு பலந்தான் பாரு, மூட்டுவாய் பூநீறு கழஞ்சியொன்று முந்தியதோர் வெண்கருவு நீரா லாட்டி, மாட்டுவா யிருசாமம் அரைத்தபின்பு வளமாக வில்லைசெய்து வெயிலிற்போட்டு, காட்டுவா யுலர்ந்தபின்பு மூசைக்குள்ளே நயமாக வைத்ததனைக் குகைவாய்மூடே. 12.

மூடப்பா வோடுகொண்டு சீலைசெய்து முன்போலே யுருக்கியெடு வெண்கலமாய்நிற்குந், தேடப்பா முன்போலே சோதித்தேறு செகமெ ல்லா மிரும்பினுட ஈயங்காணார், ஆடப்பா யிதனாட்டுச் சித்தராட்டு ஆ ஆ ஆ நாகமதில் கூடிற்றானல், வீடப்பா பலத்துத்தடா பிறவியேது மிதமிஞ்சு மென்றுசித்தர் மறைத்திட்டாரே. 13

மறைத்திட்டார் அயத்தினொடு காந்தந்தன்னை மக்களே யயமிருத்துத் தட்டுமென்று; குறைத்திட்டா ரறுசுவையுங் கழற்றமுன்பே கொள்வதற்கு முதல்கற்ப மென்றுகூறார், நிறைத்திட்டே னுலகமெல்லாம் சித்தாய்ப் போக, நிலையான ஆறுவரை யுறுதிசொன்னேன், முறைத்திட்டந் தப்பா மல் கற்பமேற மூந்தவே யயக்காந்த மொழிந்திட்டேனே. 14

மொழிந்ததொரு அயக்காந்தம் பலந்தானென்று முத்தமிழ்தேர் புல த்தியனே வகையொன்றுக்குத், தெளிந்ததொரு தங்கமது பலந்தான்ரெண்டு சேரவே மூன்றுமொன்றா யுருக்கியாட்டு, கொளுந்ததொரு கல்வத்திற் பொடியாய்ச்செய்து கூட்டப்பா கண்டிடைக்குச் சவ்வீரத்தை வளிந்த தொரு ரசமதிலே பனியிற்போடு மாட்டடா தங்கவிடை சூதந்தானே. 15

சூதமுற வாலைதன்னை நாள்மூன்றிற்றான் சுறுக்காக நித்தியமொரு சாமமாட்டி, நாதமுற முலைப்பாலி லாட்டிஆட்டு ராப்பனியிற் போட்டுவிடு மூன்றுநாளாய், வாதமுமோ வேதையிடும் வாதிக்கல்லோ வயித்தியத்தில் வாலைரச மார்க்கஞ்சொன்னேன், வேதையிதி லோடாது ஆசியாதே வே தைக்குக் குருவேறே விளம்பக்கேளே. 16

விளம்புவேன் வாலைரசங் கண்டிடைக்குரெட்டி மீறியதோர் கெந்தியிடு சீலைபத்தொன்று, வளம்பெறவே பொற்றலையின் சாற்றாலாட்டி வாசமா யிரண்டுநா ளரைத்தபின்பு, உளம்பிலக்கக் குப்பியிலே யுலர்த்தியிட்டு உத்த மனே வாலுகையில் தீயைமூட்டு, தனம்பெறவே மூன்றுநாள் முந்தீயிட்டு தப்பாது தளமுறுசெந் தூரமாமே. 17

செந்தூரஞ் செகப்பென்ன முருக்கம்பூவோ தேகத்துக் கழிவேது வயி ரவனைப்பூசி, செந்தூர மெடுத்தடக்கிச் சிவனைப்பூசி தேவியொடு கணபதிக் குப் பூசைபண்ணி, செந்தூரந் தின்பதற்குத் தீட்சைக்குள்ளே செயமாகக் கிரகலக் கினமுஞ்சொன்னேன், செந்தூரங் குன்றியிடை மூதண்டத்தின் திரமான லேகியத்திற் பொதிந்து தின்னே. 18

தின்னவே லேகியந்தான் முன்பேசெய்வாய் தீட்சையிரு நூற்றுள்ளே திடமாய்ச்சொன்னேன், மன்னவே லேகியத்தை யாருஞ்சொல்லார் வளமாகக் காசிடைலே கியத்திற்கொள்ளு, உன்னவே மண்டலங்கொள் வியது கண்டு உத்தமனே நோய்களென்ற தெல்லாம்போகும், அன்னமொடு பால் ஜீனி பத்தியந்தான் அப்பனே மற்றொன்று மாகாவாறே. 19

ஆகாது யென்றுசொன்னே னேதேதென்று லயமிருக்குத் தட்டுதற்குப் பத்தியமேவேணும், வாகான செந்தூரம் நோய்கொண்டோர்க்கு வளமான வனுப்பான மறிக்குகூட்டித், தாகான மண்டலமே குன்றிவீதம் சாதித்தால் நோயெல்லாம் தவறுண்டேபோம் பாகான பத்தியங்கள் காக்கவேண்டாம் பத்தியமாம் புகையிலையுப் புளியுந்தானே. 20

தானென்ற ரெண்டும்விட்டுக் கொண்டாற்கேளு தவருது சகலவியாதிகளுந்தீரும், ஊனென்ற வுடம்பெடுத்தால் .சாகாக்கல்வி உத்தமனே யிதுக்கல்லோ தனசெந்தூர, மானென்ற பெண்கள்வலைக் குள்ளே சிக்கி மான்வதற்கோ செந்தூர வைப்பைச்சொன்னேன், தானென்ற பேச்சும்போய் தன்னைக்காணுஞ் சாதகமாய் லட்சியத்தின் குறிப்பைப்பாரே. 21

பாரப்பா வாசியினால் யோகமாகும் பரிவான தீட்சையினால் சித்தியாகும், காரப்பா சாபமெல்லாம் நிவர்த்தியாகும் கற்பத்தில் முதல்கற்ப மயக்காந்தங் கொள், சேரப்பா சித்திபெற்ற தேகனாலே செந்தூர மயத்தாலே தெளிந்து காணும், பேரப்பா கேட்டுடனே யெமதூதாக்கள் பேசாதே யோடுவர்காண் பின்பாராதே. 22

பாராதே சித்தாந்த மொன்றுமில்லை பஞ்சகர்த்தாள் சடலமது வேகுமட்டுஞ், சேராதே யென்றுசொல்லும் வேதாந்தத்தைத் தெளிந்தறிய மாட்டார்கள் சைவமாடு, கூராதே பூரணமா மென்றதெய்வக் கோவிலுக்குட் சுயம்புவாய்து பாதாரத்தை, சேராதே யிருப்பதென்ன வென்றுசொல்லிச் செப்புகிறேன் சித்தாந்தந் தெளியத்தானே. 23

தெளிவான மனத்தோர்க்கு வாதஞ்சொன்னேன் திடமற்ற மூடருக்குத் திடமுஞ் சொன்னேன், தெளிவான பேருக்கு வைத்தியஞ் சொன்னேன் செய்முறையிற் கறபநெறி கூடவேண்டி, தெளிவான மாணவர்க்கு ஞானஞ் சொன்னேன் சித்தியுடன் முத்திபெற யோகஞ் சொன்னேன், தெளிவான மனத்தோர்க்கு மவுனஞ் சொன்னேன் தீட்சையொடு பூஜைவிதி செப்பினேனே. 24

செப்பினேன் வாதத்தி லட்சம் காப்பு திரமான வைத்தியத்தி லிரண்டுலட்சம், செப்பினேன் வாதத்தி லாயிரந்தான் தெளிவாக விருகாண்டந் திரமாய்த் தேர்ந்து, செப்பினேன் சூத்திரந்தா னிருநூறப்பா தீட்சைவிதியிருநூறுந் தெளிவாய்ச் சொன்னேன், செப்பினேன் ஞானமா யிரந்தான் தேர்ந்து தெளிவாக ஒருநூறில் திறந்திட்டேனே. 25

திறந்திட்டேன் வைத்தியத்தில் குறுக்கிலட்சம் செப்பினே னதிற்பாதி யதனைத்தேர்ந்து, திறந்திட்டேன் வாதத்திற் சூஸ்திரம்போல் தெளிவாக வைத்தியத்தில் சூஸ்திரமேகட்டி, திறந்திட்டே னிவ்வண்ண முந்நூறுந்தான் சிறுபிள்ளைக் காணலும் வைத்தியந்தான், திறந்திட்டேன் பூரணசூஸ் திரந்தா னப்பா செய்யிலிரு பத்தோரா யிரத் தறு நூறே. 26

நூறான யிருபத்து ஒன்றுநூறு நுகரவே அறுபத்து நாலுகாண்டம், வீறான யிதைக்குறுக்கிச் சூஸ்திரம்போலப்பா வெட்டவெளி பூரணஞ்சூஸ் திரத்தைச் சொன்னேன், கூறான யிருநூற்றுக் குள்ளேகேளு கொட்டி னேன் சரியையொடு கிரியையோடும், பேறான யோகமொடு ஞானத்தோடும் பிலத்தசுவா சந்தனிலே பேணிக்காணே. 27

காணப்பா விட்டகுறை மார்க்கத்தோர்க்கு கைவிட்ட சூஸ்திரமாய் வெளியிற்போட்டேன், தோணப்பா கற்பத்திற் பத்துநூறுந் துடியாகக் குறுக்கியிதை நூறாய்ச் சொன்னேன், பேணப்பா கற்பநூ லிருநூறுஞ் சொ ன்னேன் பிலத்ததொரு மாந்திரீகம் நூறுஞ் சொன்னேன், பூணப்பா யந்திர தந்திர மயேந்திரசாலம் பூட்டினே னாயிரந்தான் புகழ்ந்துபாரே. 28

பாரப்பா அடிதொடுத்து கற்பங்கொண்டு பரிவாக உண்டுவரும் காலந்த ன்னில், சாரப்பா நாதமொடு பித்தத்தாலே தனித்தசிலேற் பனத்தாலே தாறுமாறாய், சூரப்பா பாராமல் கற்பங்கொண்டு சுழன்றலையா தேநோய் கள் வருகும்நேரம், காரப்பா செந்தூர மினங்கள் தோறுங் கட்டாய்ச்செந் தூ ரித்துக் கடக்கவையே. 29

வையப்பா கற்பங்கள் கொள்ளுமுன்பே வகையான லேகியங்கள் சூர ணங்கள், செய்யப்பா கிருதமொடு தயிலமோடு செய்துகொண்டு திஷ்டி யப்பா கருமத்தோடு, பொய்யப்பா வுரைப்பதென்ன புத்திசொன்னேன் புல ஸ்தியனே யிதுக்குரைத்த வைத்தியந்தான், மெய்யப்பா வென்றோர்க்கு மெய் யேயாகும் விழலென்றாற் பொய்யாகும் விளம்பக்கேளே. 30

### கற்பூரசலாசத்து.

கேளப்பா கற்பூர சலாசத்துத்தான் கெடியாகப் பலமொன்று பொரி காரந்தான், நாளப்பா பலமொன்று ரென்றுங்கூட்டி நலமான பருத்திநீறு துத்திவேர்த்தோல், நீளப்பா பாங்காகக் கஷாயம்செய்து நிசமாக விட்டா ட்டு ஒருநாள்மட்டும், மாளப்பா அஞ்செருவிற் புடத்தைப்போடு ஆறியெடு கல்வத்தி லாட்டுதானே. 31

ஆட்டத்தா னாகுமடா வெண்கருவைவிட்டு அரைத்துவில்லை செய்ரவி யிலுலர்த்திக்கொண்டு, மாட்டவே அஞ்செருவிற் புடத்தைப்போடு வாகாக அரைத்து அஞ்சு தரமுமானால், நாட்டவே வெண்பொடியாம் பதனம்பண்ணு நலமான பெருவயிறும் கோதரங்கள், ஊட்டவே நீர்செரிப்புக் கல்லடைப்பு நீடுமப்பா வெடியுப்புச் சுன்னத்தே. 32

வெடியுப்புப் பலம்பத்துப் பூநீறுபத்து வேகமடா பழச்சாற்றிற் சாமமாட்டி, அடியிருப்புக் கறண்டியிலே வழித்து வைத்து அப்பனே கொதிக்க வைக்கச் சுன்னமாகும், கொடியதப்பா பீங்கானில் நீரதாகும் கூறினேன் வைத்தியத்தி லுப்புநீரே, துடியப்பா சலாசத்துத் தனக்குமுன்னே தோயப்பா அதைத்தன்னைப் புடத்திற்போடே. 33

போடப்பா வதுவல்லோ வறுத்துவாங்கும் பொறிவந்து கற்பங்கள் கொள்ளும்போது, நாடப்பா தசவாய்வு பேதங்கொண்டு நச்சாம்பல் கொடியுதிரம் பெருத்துக்காணும், கூடப்பா விதுக்கல்லோ காரச்சுன்னங் கொட்டினேன் சத்தோடே கூட்டிக்கொண்டு, சாடப்பா உன்கையிலே சத்துக்காரந் தடையறவே புலிபோலே தாக்கும்பாரே. 34

அப்பிரசத்து.

தாக்கிடவே அப்பிரகச் சத்துசொல்வேன் சாதிப்பே னப்பிரகம் நவநீதந்தான். வாக்கிடவே பலமொன்று வெடியுப்போடு வளமான வெங்காரஞ் சாரம் வெள்ளை, தாக்கிடவே தாளகமுங் கெவுரிசூதஞ் சங்குமுடி தாரமுறு காரசிங்கு, தேக்கிடவே பூரக முலர்ந்ததப்பா சேர்த்திடுவாய் வகைக்குமொரு கழஞ்சிதானே. 35

கழஞ்சியடா பூநீறு பதினொன்றாகக் கட்டுமடா நவநீதத் தோடுங்கூட்டி, வழஞ்சியதை கல்வத்தில் வெண்கருநீராலே மாட்டிடுவா யிருசாமம் வில்லைசெய்து, குழஞ்சுவிட வச்சிரக்குகைக் குள்ளேவைத்துக் கூறாகச்சில்விட்டுச் சீலைசெய்து, தழஞ்சதடா அஞ்சுதர மிளகப்பாரு தாக்குலையி லூதிடவே சத்துமாமே. 36

சத்தடா சோதித்தால் மணியாந்தன்னைச் சதிராகச் சோதிக்க மருந்துகொண்டு, ஒத்தரசஞ் சத்திடைக்குச் சோதித்தேபார் உத்தமனே சரிகை வெள்ளி போலே சயம், பெத்துதடா சூதத்தைப் பதைக்கையிலேகொல்லும் பெரியோர்கள் கவந்த சத்துவிள்ளார், சித்திவருங் கற்பத்துக் குறுதிமெத்த சேரப்பா புடத்தங்கஞ் செலுத்தியாட்டே. 37

ஆட்டிடுவா யப்பிரக சத்துத்தானே அப்பனே பலமொன்று உருகும்போது, மூட்டிடுவாய்த் தங்கமொரு பலந்தானப்பா மூசையிலே ரெண்டுமொன்று யுருக்கிவாங்கி, போட்டிடுவாய்க் கல்வத்திற் பொடிக்கத்தூளாம் புகழாகக்கண்டிடைக்கு வீரம்போடு, காட்டிடுவாய்த் தங்கவிடை சூதம்வாரு கைமுறையாய் முலைப்பாலி லரைத்துப்போடே. 38

போடப்பா நாளொன்றுக் கொருசாறந்தான் புகழாக மூன்றுநாள் பனியிற்போடு, ஆடப்பா சுருளட்டை போலேசூத மாகுமடா கெந்தகந்தான் ரெட்டிப்பிட்டு, தேடப்பா பத்திலொன்று சிலையுமிட்டு நீர்க்கமாய்ப் பொற்றலையின் சாற்றாலாட்டி, சூடப்பா ரெண்டாநா ளரைத்தபின்பு சுகமாகப் பொடிசெய்து குப்பிக்கேற்றே. 39

ஏற்றியே வாலுகையி லெரிப்பாயப்பா என்சொல்வேன் மூன்றுநாட் சென்றபின்பு, ஆக்கியே குப்பிக்குள் சலாகையிட்டு அடியிலே யிண்டிப்பா ரகாரத்தாலே வாத்தியே செந்தூரம் பவளவர்ணம் வாச்சுதடா காயசி த்தி வசமாய்ப்போச்சு, தேற்றியே விடுவென்று தேகந்தன்னைச் சித்தி பண்ணு முத்திபண்ணு திறத்தைக்காணே. 40

திறமான அப்பிரக செந்தூரந்தான் செய்வதென்ன உறுதியென்றால் சற்பத்தாலே, திறம்பெற்ற தோஷங்கள் சயங்கள் மேகம் நிலைகெட்ட கண் மயக்கம் மையல்தாகம், குறமான குட்டங்க ளசாத்தியரோகம் குன்மங் கள் முகரோகம் மூலரோகம், அறவான வாதபித்தஞ் சிலேற்பனத்தால் அளவற்ற நோயெல்லா மகன்றுபோமே. 41

அகன்றுபோ மப்ரகசத் தென்றுசொன்னால் அப்பனே சற்பத்தை யுறுதிபண்ணு, விகண்டமே வாராது விஷமெல்லாம்போம் வேணபடி கற் பத்தைத் தின்றுதின்று, அகண்டமெல்லாம் போச்சு மலைக்கவேண்டாம் அப்பனே வழலைதள்ளிக் கடுக்காய்கொண்டு, இகம்பெறவே மூலிகற்பங் கொள்ளும்போது இனியில்லா நோய்களெல்லா மெதிர்க்கும்பாரே. 42

எதுத்துவரும் நோய்களெல்லாம் தூரத்திவோட்டு மிகத்தைவிட்டுப் பரத் துக்குள் ளாகப்பண்ணும், மதிக்கவருங் கற்பமெல்லாம் வளமாயேற்று மனம் நினைவ யறிவோடே வளர்ந்தேயேறுந், துதிப்பதற்கு காதலி காதிற்சேட் குஞ்சொற்பெரிய குண்டலிக்கு ணைந்திமீளும், கதிர்க்குளித்து அப்பிரக சத் துத்தங்கள் கண்டாயோ செந்தூர மாலையாலே. 43

நி மி ளை ச த் து.

ஆகாகா நிமிளைசத்தைக் கேளுகேளு அப்பனே பொன்னிமிளை பலந் தானொன்று, பாகான ரோமமது பலந்தானொன்று பழச்சாற்றி லூறவைத்து மூன்றுநாள்தான், வாகாகக் கழுவியதின் மேலேசுத்தி மைந்தனே அரிதா ரம் வங்கம்ரெண்டு, சாகவே பொன்னிமிளை மேற்பொதிந்துபின்பு சாத்தடா ரோமத்தைச் சார்ந்துகேளே. 44

கேளப்பா குகைக்குள்ளே அரைப்பலம்பூரகங் கெடியாக வைத்ததின் மேல் மயூரம்நிற்கும், வேளப்பா அரைப்பலந்தான் பரத்திவைத்து வெண் காரம் அதின்மேல்கால் பலந்தான்வைத்து, வாளப்பா பொன்னிமிளைக் கலசம்வைத்து மாட்டடா வதின்மேல்கால் பலந்தான்காரம், நாளப்பா வதின்மேலரைப் பலமயூரம் நன்றாக வதின்மேலே யரைத்திடுபூநீறே 45

பூநீறு சழுஞ்சியொன்று மேலேதூவிப் பூரக மரைப்பலந்தான் அதின் மேல்வைத்து, வேளுகக் குகைவாயி லோடுமூடி விரியாமல் மண்சீலை யஞ் சுசெய்து, தானாக வுலையில்வைத்து ஆறஆற சாந்தமாம் பொன்னிமிளைச் சத்தாகும், வானவர்கள் போற்றுமிந்த நிமிளைசத்து வளமான வெண்கல ம்போல் தருகும்பாரே. 4

பாரப்பா நிமிளைசத்து சோதித்தேபின் பரிவான பொன்னிறமாயிய மாகும், ஆரப்பா நிமிளைசத்து யாருஞ்சொல்லார் அப்பனே வயித்தியத்தைக் குறியாகுஞ், சேரப்பா கற்பத்தால் வந்ததோஷம் நீருமடா நோய்களை ல்லாம் படிதானென்றால், மேரப்பா பருப்பதம்போற் பஞ்சுவைத்து மினை சறுபோற் றீயைவைத்த கதைபோலாமே. 47

நிமிளைச்செந்தூரம்.

போமென்ற நிமிளைசத்துப் பலந்தானொன்று பூட்டடா மூசையிலே யுருகும்போது, ஆமென்ற சருநாகம் பலந்தானொன்று அப்பனே தங்கமது பலந்தானொன்று, சாமென்றேன் தங்கமொடு வங்கம்ரெண்டு சாதகமாய்க் கல்வத்திற் பொடிக்கத்தானாம், வேமென்றேன் வீரமது பலந்தானுறு மேலான மூலைப்பாலே விட்டுஆட்டே. 48

ஆட்டையிலே கோழிமலம் வெள்ளைசேரு அப்பனே கால்பலந்தான் கூடப்போட்டு, மூட்டையிலே வாலைரசம் சவ்வுப்போலாம் முறையான சூதம்ரெண்டு பலமேவரு, மாட்டையிலே மூன்றுநாள் பனியிற்போடு மறுபடியுங் கெந்தகந்தான் பலமீராறு, கூட்டையிலே பொற்றலையின் சாற்றாலாட்டிக் கொடியசிலைக் காற்பலமுங் கூடப்போடே. 49

போட்டிடுவாய் வில்லைசெய்து ரவியிற்றானே பொடிசெய்வாய் பின்பெத்துக் குப்பிக்கேற்றி, நாட்டிடுவாய் வாலுகையில் மூன்றுநாள்தான் நலமாக முத்தீயும் நன்றாயிட்டு, மூட்டிடுவாய் சலாகைகொண்டு சோதித்துப் பார் முனையிலே கரகரக்கும் பதந்தானப்பா, கூட்டிடுவாய் குப்பிதனை யுடைத்துவாங்கு குப்பசிவப் புறுநிமிளை சுறுக்குத்தானே. 50

சுறுக்கான செந்தூரம் நிமிளையாச்சு சொல்லக்கேள் ஒருபோது குன்றி யுன்னைக், கறுப்பான ஆவின்பால் தன்னிற்கொள்ளக் கண்விழித்து மூடமுன்னே பிணமும்பேசும், வெறுத்தானே சடலத்தைக் காலனப்பா மெய்யுளைச்சல் பொருத்துளைச்சல் சதைக்குள்தோஷம், முறுக்கான விஷகடிகள் விடத்திற்குஷ்டம் முகவாத மேகமென்ற தெல்லாம்போமே. 51

போமடா வாதத்தில் வந்ததோஷம் போகுமடா பித்தத்தால் வந்ததோஷம், மாமடா சிலேற்பனத்தால் வந்ததோஷ மல்லாந்தான் நிமிளைசத்தைக் கண்டபோதே, நாமடா உனக்கெதிரோ வென்றுநோய்கள் நாட்டிலே யெவரிடத்துஞ் சேரப்போனால், காமடா நிமிளையங்கே கண்ணுற்பார்த்தால் கட்டோடே கடல்புக்குங் கதியில்லாதே. 52

இல்லாதே யிருந்துகொண்டு கற்பங்கொண்டா லிலட்சியத்தி லறிவோடே வாசிபார்த்து, வல்லமையாய் சாதிக்கும் யோகசித்தி ளமான குளிகைமுதல் மந்திரதிட்சை, நல்லதொரு பூசைவிதியமூர்த்தலேபியம் நலமான வாதமொடு பிலக்கக்கண்டு, செல்லுவாய் பின்பங்கே சித்தரோடே சேரலாங் கைகொள்வார் திறத்தைப்பாரே. 53

திறமான வயித்தியத்தைச் சொன்னேனப்பா திறங்கெட்ட லோகர்க்கோ செப்பினேன்கே, ஞறுவாத ரசவாதத் துள்ளமுந்திப்பின்னே உத்தமனே யினசாரி சரக்குச்சேர்ந்தால், சிறவிக்கும் வயித்தியந்தான் வாதிக்காகும், நேரான காலசித்தி பிசமதாகும், விருதடா பேசியே லோகத்தோர்கள் வேரோடே வயித்தியமெல்லாம் வருமென்பாரே. 54

## தாளகநீறு.

பாரப்பா புலத்தியனே அய்யாகேளு பாங்கான தாளகத்தி னீறுசொல்வேன், சேரப்பா தாளகந்தான் பலந்தானொன்று திறமான கல்சுண்ணத் துள்ளேவைத்து, சாரப்பா அமரிபடி விட்டிடீற்றுத் தாளகந்தான் சுத்தியதாயிரண்டெத்தில். வேரப்பா பழச்சாறு படிதானூட்டு வெள்ளைச்சி மூலைப்பால் தான் படிகாலூட்டே. 55

ஊட்டியபின் னரிதாரம் பேராமூட்டிச்சா றாத்தியே யரைத்திடுவா யிரண்டுசாமம், ஆட்டியபின் வில்லைசெய்து ரவியிற்போடு அப்பனே மூன்றுநாள் காய்ந்தபின்பு, கூட்டியதோர் செருப்படிகால் படியின்சாறு கொட்டுவாய் குகைக்குள்ளே புரசஞ்சாம்பல், காட்டியே மேல்மூடிச் சீலைசெய்து நயமாக விரண்டெருவிற் புடத்லெதப்போடே. 56

## சூதபற்பம்.

புடம்போடத் தாளகந்தான் வெளுத்துநீறும் பேசாதே தாளகத்தின் வெள்ளை தன்னைத், திடம்பெறவே கெழுளுக்குள் பதனம்பண்ணு செப்பக்கேள் சூதபற்பந் திறமாய்ச்சொல்வேன், அடம்பிலையும் கடம்பிலையும் சிறுபட்காலூ அப்பனே வகைக்குமொரு படிச்சாறுக்குள், விடமதிட்டு வார்த்திலே கரந்தைச்சாறு விளங்கவே படியொன்று அதிலூள்வாரே. 57

வார்த்திடுவாய் முன்செய்யும் வரிசைகேளு வாகான காட்டுள்ளிக்கிழங்குச்சாறு, சேர்த்திடுவாய் கார்த்திகையின் கிழங்குச்சாறு சேரவே பண்ணுங்கோல் மூலிச்சாறு, ஏர்த்திடுவாய் வகைக்குமொரு படிசாறாக எடுத்தல்லோ சூதமொரு பலத்துக்குத்தான், பார்த்திடுவாய் கார்தசத்தின் இணைத்துள்ளே பதையாமற் சாருமடா சுறுக்குத்தாக்கே. 58

சுறுக்கிட்ட பின்பெடுத்துச் சூகந்தன்னைத் தூடியாகக் கல்வத்தி லிட்டுக்கொண்டு, வெறுத்திட்ட முன்சாற்று லரைப்பாயப்பா மெழுகுபோ லாகிவரும் வில்லைசெய்வாய், உருக்கிட்ட ரவியிலே காயப்போடு உத்தமனே குகைக்குள்ளே வைத்துமூடி, வெறுக்கிட்ட சீலைசெய்து புடத்தைப்போடு வெளியிலே பரைபூசை விளம்பச்செய்யே. 59

செய்யவே தேவியங்கே வார்த்தைசொல்வாள் திடமான சூதபற்பம் வாச்சுதென்பாள், பையவே அஞ்செருவிற் புடத்தைப்போடு பாங்காக ரசவெள்ளை ரசகற்பூரம், மெய்யப்பா கற்பந்தான் கூட்டமிதில் விஷநீரால் குறைநோவு கண்டதாறல், மெய்யவே சூதபற்பங் குன்றிதானும் மகத்தான தாளகத்தின் பற்பங்கூட்டே. 60

கூட்டுவாய் குன்றியிடை யிரண்டுங்கூட்டிக் கொள்ளுவாய் நூறுண்டின் வேப்பம்பட்டை, நீட்டுவாய் பலம்நூறு வெள்ளாட்டுச்சம் நிசமாக அஞ்சு பத்து பலமேசேர்த்துக், காட்டுவாய்ப் பூத்தயிலம் வடித்துவாங்கி கருவான வீழிவேர்ச் சூரணமேசெய்து, மாட்டுவாய் செருப்புக்கால் தனிச்சாறாக வாங்குவாய் படிநாலு மதனில்வாரே. 61

வாரப்பா பனைவெல்லம் பலந்தான்பத்து மருவியே கரைத்திடுவா யடுப்பிலேற்றிச், சேரப்பா கமலத்தி யாகமூட்டு செப்பினதோர் வேம்பிலுட் கலந்தன்னைக், கோரப்பா படியொன்றக் கூடவிட்டு கொட்டவே வீழிசூ ரணத்திலேறு, சாரப்பா படியரைதான் புங்கம்பூவுந் தனிச்சூரணத்தோடவைப் படிதான்போடே. 62

போடப்பா மிளகுசுக்கு ஓமங்காயம் புத்தோடு தொட்டியொடு கிறுப்பு யேலம், ஆடக்கேள் சீரகமு மதாரமோடு அப்பனே வகையொன்று கழஞ்சி யொன்று, நாடக்கேள் கார்கோலரிசி பலமேநாலு நாட்டடா பலம்நாலு பறங்கிப்பட்டை, சூடக்கே ளிவருப்பாய்ச் சூரணமேசெய்து சூரணமெல்லாமொன்றாய்க் கூட்டிவையே. 63

வைத்தபின்பு காரெள்ளுப் பலந்தானஞ்சு மருவியிடி செங்கொட்டைப் பலமிரண்டு, நைத்தபின்பு சூரணத்தைப் பிசைந்துகொண்டு நலமான பாகு செய்து வருமந்நேரம், பொய்த்ததல்ல சூரணத்தை யதிலேபோட்டு பூணவே தேனுமொரு படிதான்வாரு, மெய்த்திடவே ஆவிநெய் படிதான்வாரு மெழுகுபதம் ஆம்போதே வழித்துவாங்கே. 64

வழித்துவைத்து பீங்கானுக் குள்ளேநீதான் வாகாகத் தினமொன்றுக் கிருநேரந்தான், கழிப்பாக லேகியத்தைக் கழஞ்சிவீதம் கர்த்தாவை மனதுக்குள் தியானம்பண்ணி, ஒழித்திடவே முன்சொன்ன பற்பங்கூட்டி உண்ணவே மண்டலந்தான் புளியாகாது, தழிப்பான புகையிலையும் வழுதலங்காய்விட்டு தகையாகப் பாலுப்பைச் சத்தைக்கூட்டே. 65

கூட்டவே பதினெட்டு குஷ்டமெல்லாங் குடிபோமே மென்றுசொல்லிச் சட்டைதள்ளுந், தாட்டோட்டு சாராது பத்தியந்தான்தப்பில் சண்டுமடா தாளகமுஞ் சூதபற்பம், வீட்டோடே யிருந்துபின்பு பத்யங்காத்தல வெகுசுறுங்காய் கேட்குமடா சூதபற்பம், பாட்டோடு துன்பம்விட்டுத் துயரம்நீங்கிப் பரிசினத்தின் வேதையைப்போல் தேகமாமே. 66

அண்டச்சத்து.

ஆமப்பா அண்டோடு பலந்தானொன்று அப்பனே சூதமொடு காரசாரம், தாமப்பா கெவுரிவெள்ளை யரிதாரந்தான் சாதகமாய் மிருதார சிங்கியோடு, போமப்பா வகையொன்று கழஞ்சிரெண்டு புதிதான கல்வத்தி லரைக்கச் சறு. நாமப்பா வெண்கருநீர் விட்டுருட்டி நலமாகச் சாமம்ரெண்டு வில்லைத் தட்டே. 67

கட்டியபின் ரவியிலே மூன்றுநாள்தான் காய்ந்தபின்பு குகைக்குள்ளே வைத்துமூடி, வொட்டியபின் சீலைசெய்து உலையிலூது உத்தமனே வொரு மணியாய் நிற்கும்பாரு, வெட்டிணியா மண்ணோடு வெண்கலம்போலாகும், விள்ளார்க ளுபசரித்துக் காரியப்பா, அட்டியில்லை யண்டசத்தைச் சோதித்தேதான் அப்பனே ஈயந்தான் பலந்தானாக்கே. 68

ஆக்கப்பா சமனாகத் தங்கந்தன்னைத் தூடியாக விரண்டுமொன்றா யுருகும்போது, தாக்கப்பா ரசமொரு பலத்தைவொரு தவளையைச் சர்ப்பமது விழுங்கும்வாறும், போக்கப்பா நாகமொரு பலத்தைப்போடு போட்டபின்பு யீயமொரு பலந்தான்போடு, வாக்கப்பா விங்கமொரு பலந்தான்போடு மருவிநின்று உருகுமடா களங்கமாச்சே. 69

ஆச்சப்பா களங்கத்தைக் கல்வத்திலிட்டு அடங்காத கெந்தகந்தான் பெட்டிப்பிட்டு, வாச்சப்பா பத்திலொன்று சிலையுமிட்டு வாகாகச் சற்றைப் பாலாலாட்டு, வீச்சப்பா நாளொன்று பொற்றலையின்சாற்றால் விளங்கவே ரெண்டுநாளானபின்பு, பாச்சப்பா வில்லைசெய்து ரவியிற்போடு பாங்காக மூன்றுநாள் காய்ந்தபின்பே. 70

காய்ந்தபின்பு குப்பியிலே செலுத்திக்கொண்டு கருணைபெற வேறு மென்றே வாலுகைக்கெந்திரம், வாய்ந்ததோர் முத்திபு மூட்டிமூட்டு வளமாக நாலாநாள் குப்பிவாங்கு, சாய்ந்ததொரு அருணனைப்போற் செந்தூரந்தான் சாதிக்கு மெதிராளி யெதிர்க்கமாட்டான், ஆய்ந்ததொரு அண்டத்தின் வங்கனாக மடர்ச்சுழுந்தி ருந்தெந்தி யருளைப்பாரே. 71

அருளான கற்பங்கள் கொள்ளும்போது அடங்காத தாகமொடு நீரிரக்கம், மருளான மயக்கமொடு கன்னிமையல் வாதத்தி லெழுந்த பிணிரோகம், சுருளான மந்தார காசமொடு சுவாசகா சத்துடனே சகையில் தோஷம், கருவான கற்பத்தால் கலந்தநோய்கள் கண்காணா தோடுமப்பா கண்டுபாரே. 72

## க்ஷயரோகத்துக்குலேகியம்.

கண்டுகொள்ளு மண்டலத்தின் செந்தூரந்தான் கலைக்குமடா நாடியெல்லா மிறுக்குந்தேகம, ஒன்றுவிடு குன்றியிடைப் பனைவெல்லத்தில் உத்தமனே ஒருபோது கொண்டாற்போது, மண்டுகின்ற க்ஷயரோக மிஞ்சிற்றால் வகையொன்று சொல்லக்கேளடாதோடை, இண்டுசங்கு அதுவளை முருங்குமுல்லை இலந்துளசி கண்டங்கத் திரியாமென்னே. 73

என்னவே மூலிகைதான் வகையொன்றுக்கு இடித்ததொரு சாறப்பா படிவீதந்தான், சொன்னசொன்ன மூலியுட சாற்றையெல்லாம் தோணவே பனைவெல்லம் பலமுமூன்று, அன்னவே யடுப்பில்வைத்துக் காயும்போது அரத்தையொடு திரிகடுகு திரிபலாதி, பின்னவே கற்கண்டு வசம்பிட்டேறு விளங்கவே வகையொன்று பலந்தானா ரெண்டே. 74

பலமான தொருபலந்தான் கெற்பொரியுங்கூட்டிப் பாங்காக மருந்தையெல்லாம் சூரணித்து, செலமான பாகெல்லாம் பாகஞ்சேரில் திடமான சூரணத்தை யதிலேபரய்ச்சு. பிலமான தேனதிலே படிதான்வாரு பேசாதே ஆவின்நெய் படிதான்வாரு, குலமான லேகியமாம் வழித்துவைத்து கூசாதே பீங்கானிற் பதனம்பண்ணே. 75

பதனமாய் வைத்திருப்பாய் லேகியத்தைப் பாங்கான கழஞ்சிகிறை யெடுத்துக்கொண்டு, சுதனமா யண்டத்தின் செந்தூரத்தைச் சுறுக்காகக்குன்றி யிடை யொருபோதுண்ண, விதனமெல்லா மொழிந்துதடா க்ஷயரோகங்கள் வேரோடே அத்துதடா உபரசத்தின்வேகம், மதனகா மேசுரமாம் விந்துகட்டும் மங்கையரைத் தோய்ந்தாலும் வாராதென்னே. 76

வாராது கிருஷ்ணஅப் பிரகந்தன்னை வாய்ப்பாக நவநீத மாகச்செய்து, பேராது பலமொன்று வாங்கிக்கொண்டு பிலத்தவெடி யுப்புடனே காரஞ்சாரஞ், சாராது சீனமொடு குடன்கூட்டித் தயவான கல்லுப்பு வகையொன்றுக்கு, வாராதே கழஞ்சியொன்று கூடப்போட்டு வாகான பழச்சாற்று லொருநாளாட்டே. 77

ஆட்டியபின் வில்லைசெய்து உலரப்போட்டு ஐம்பதெருக் குள்ளேதான் புடத்தைப்போட்டு, மூட்டியபின் யெடுத்ததனைக் கல்வத்திட்டு முழுங்கவே கர்பூர வல்லிச்சாற்று, லூட்டியபின் னரைத்திடுவாய் பலந்தான்கெந்தி உரப்போடு நாளொன்று செவ்குல்வில்லை, காட்டுவாய் ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு கட்டக்கேள் ஐம்பதெருக் குள்ளேபோடே. 78

போடப்பா புடமாறி யெடுத்துக்கொண்டு புகழாகப் பழச்சாறு கல்வத்திட்டு, ஆடப்பா நாளொன்று அரைத்துவில்லை அப்பனே யரைத்துமுன் போற் புடத்தைப்போடு, தேடப்பா ஆறினபின் கல்வத்திட்டு திடமான குட்டித்தக் காளிச்சாற்றால், கூடப்பா நாளொன்று அரைத்தபின்பு குமுறவே வில்லைசெய்து புடத்தைப்போடே. 79

புடமாறி யெடுத்ததனை யெருக்கம்பாலாற் பேசாதே நாளொன்றுஅரைப்பாயப்பா, திடமாக வில்லைதனை உலர்த்திக்கொண்டு சிறப்பாக முன்போலே புடத்தைப்போடு, நடமாடு பின்பொருக்கால் பழச்சாற்றாலே நலியாதே தினமொன்று அரைத்தபின்பு, உடனுறு சத்துருவாம் காரஞ்சாரம் உத்தமனே தனுக்கெல்லாந் தின்றவாறே. 80

வாறுடனே கறுத்திருந்த தேவிநாதம் மாண்டுதடா கனபுடமாய் மூட்டுமூட்டு, கூறுடனே அப்பிரக நவநீதத்தைக் கொன்றவனுப் வயித்தியத்திற் கொட்டினேனுன், வீறுடனே செந்தூரம் நன்றாய்க்காட்டல் விளங்கவே பொற்றலையின் சாற்றாலாட்டித், தேறுடனே நூறெருவில் புடத்தைப்போடு செந்தூர மாகுமடா செப்பக்கேளே. 81

கேளப்பா அப்பிரக நவநீதத்தைக் கெடியாகத் திரிகடுகு தன்னிற்கூட்டி, வாளப்பா தேன்நெய்யுங் கலந்துகொண்டு மருவியசெந் தூரமிது குன்றி கூட்டி, கோளப்பா கர்மத்தால் வந்ததோஷங் கூட்டோடே போகுமப்பா பத்துநாள்கொள், ஆளப்பா உதிரத்தில் வாயுவெல்லா அபானத்தின் கீழ் வாசல் புக்கிப்போச்சே. 82

போச்சப்பா மேகமென்ற தெல்லாம்போகும் பூண்டதொரு நீரிரக்கம் போகுமப்பா, ஆச்சப்பா சீந்திபுட சக்கரையிறுலே ஆச்சரியம் அஸ்திசுரம் தோஷமில்லை. போசசப்பா காடிகளில் தோஷமில்லை பிரபலமாய்த் தேக மெல்லாம் குளிர்ச்சிபின்னும், வாச்சப்பா வயித்தியத்திற் சக்கரையேசொல் லார் வாய்ப்பேச்சோ வயித்தியந்தான் வணங்கிக்கேளே. 83

வணங்கிநீ கேளுபுலத் தியனேஅய்யா மாறாட்ட மில்லாமல் சக்கரையைச்சொல்வேன், குணங்கியே போகாமல் பருந்தண்டாகக் கொண்டு வந்து நிழலுலர்த்திக் காய்ந்தபின்பு, பிணங்கியே போகாம லிடித்துத்தூளாய்ப் பிலமாக வடிகொண்டு சூரணித்து, மணங்கியே பொடிபடுதா னொன்றுக்குள்ளே வாசமாய் நாலுபடி செலத்தைவாரே. 84

வார்த்திடுவாய் மறுநாளி லிறுத்துப்போட்டு மறுபடியுஞ் சலமதிலே முன்போல்விட்டு, கோர்த்திடுவா யிப்படியே பத்துவண்ணங் கூறாகச் செய்த பின்பு சொல்லக்கேளு, பார்த்திடுவாய் புளித்ததொரு காடிக்குள்ளே, பழச் சாறு பதினாறுக் கொன்றுவாரு, சேர்த்திடுவாய் முன்போலே யிறுத்துப் போட்டுத் திறமாக மறுபடியும் செய்யக்கேளே. 85

கேளப்பா புலத்தியனே சீந்திக்கைப்புக் கேட்டதில்லை சித்தரல்லோ செயஞ்செய்வோர்கள், ஆளப்பா வாயிலிட்டா லண்டவரைமட்டு மாகாதைப் பென்றால்வேப் பங்காயீடோ, வாளப்பா வயித்தியனே யென்றுசொன் னேன் வாதிக்கல் லோவுரைத்த மார்க்கமல்லோ, ஆளப்பா ஆவின்மோர் படிநாலுக்குள் அப்பனே கால்படிதான் பழச்சாறாட்டே. 86

பழச்சாறு விட்டபின்பு படிபொடிக்குப் பாங்காகக் கரைத்துவைத்து மறுநாள்கேளு, பழச்சாறு விட்டோ ரிறுத்துப்போட்டுப் பாலாவின் பால் படிக்குப் பொடிபடிதான்போடு. இதிச்சதல்ல வங்காள சீனிகேளு என் சொல்வேனைப்படிதான் சீனிபோடு, தழச்சுதப்பா ரவியிலே யுலர்த்த பின்பு தானமிர்த சக்கரையா மென்றுகாணே. 87

காணப்பா இப்படியே சக்கரைபேசொல்லார் கைகண்ட சித்தரென்றால் பிழைக்கச்சொல்வார், வீணப்பா மற்றதெல்லாம் சக்கரைபே அல்ல வீறு கின்ற கைப்பதனை யடக்கமாட்டார், தோணப்பா சக்கரையை வாயிற்போ டச் சுறுக்கடாஅஸ்திசுர மெல்லாம்போகும், பூணப்பா இதிலேநேடே மருந் து கூட்டப் புகலுவேன் புலத்தியனே கேளுகேளே. 88

கேளப்பா திரிகடுகு மதுரமேமைக் கெடியான வாய்விளங்கம் சுறுக்கு மூலம், கேளப்பா கற்பூரம் குங்குமப்பூ கிராம்புடனே சீரகங்கோரோசனை கஸ்தூரி, கேளப்பா சாதிக்காய் சாதிப்பத்திரி திருவைபுடன் வகையொன்று பலந்தானென்று, கேளப்பா இவைகுப்பாய் சூரணித்துத் திருவையுடன் சொல்லக்கூட விளக்கின்பூவே. 89

பூவதனை நிழலுலர்த்திச் சூரணித்துப் பூட்டிடாய் சமனாகச் சீனிகா லாய், பூவதனைச் சேகரிக்க சூரணந்தான் புகழுமுந்த சர்க்கரைக்கு நாலுக் கொன்றாய்ப், பாவதனைக் கலந்துகொண்டு பதனம்பண்ணு படியாவி மேக சலம் பறந்துபோகும், ஆவலுற லேகியமாய்ச் செய்யக்கேளு அப்பனே தாழைவிழுது சாறுவாங்கே. 90

வாங்கியே படிநாலு புதுச்சட்டிக்குள் வாரப்பா படிநாலு இளநீர்தான், தேங்கியே ரெண்டொன்றாய்க் கஷாயஞ்செய்ய செப்புவேன் குருவிஞ்சு பலந்தானென்று, ஓங்கியே சிறுபுட்கால் பலந்தானென்று உத்தமனே மிஞ்சியது பலந்தானென்று, தாங்கியே கன்னெரிப் பலந்தானென்று சாந்தமா யேலமது பலந்தானென்றே. 91

ஒன்றாக விதுவெல்லா மிடித்துப்போட்டு ஒருபடியா யிறுத்தபின் னதி லேகேளு, நன்றான சீனிபலம் நாலுபோடு ரசபாகம் வருநேரந் தன்னிலே தான், வென்றதொரு அமுர்தசஞ் சீவிதன்னை மேவியவரைப் படியளந்து யதிலேபோடு, கன்றான ஆவின்நெய் படிகாலாரு கலங்காதே நெயிற் பாதி தேனைக்கொட்டே. 92

கொட்டினபின் மெழுதபதம் தன்னிலேதான் கூறான பீங்கானில் வழித்துவைப்பாய், வெட்டினேன் தேகத்துள் நோய்களெல்லாம் விடய மிட்டு விடயமிட்டுச் சோதித்தேதான், அட்டியாச் சொல்வதிந்த அமுர்த லேகியம் அப்பனே யாருக்குஞ் சொல்லவில்லை, மட்டில்லா வயித்தியந்தான் சாஸ்திரஞ்சொன்னேன் மாருட்ட மில்லையொன்று மிதுக்கொவ்வாதே. 93

ஒவ்வாத லேகியத்திற் கழஞ்சிதுக்கு உத்தமனே அப்பிரக செந்தூரத் தைச், செவ்வாகக் குன்றிபிடைத் திறமாய்க்கொள்ளு தேகத்தில் மேகசுரம் மேகவெட்டை, கவ்வாக அஸ்திசுரம் வேகம்போகுங் கபாலத்தில் வெட் டைசுரம் குட்டம்போகும், இவ்வகைதான் பத்துநாள் கொள்ளும்போது எமனாலும் வெல்லரிது தேகந்தானே. 94

## பவளவங்கச் செந்தூரம்.

தானென்ற பவளவங்கச் செந்தூரங்கேளு சார்வான வங்கமது பலந் தானென்று, கானென்ற நற்பவளம் பலந்தானென்று கைமுறையாய்ச் சிலாசத்துப் பலந்தானென்று, வேனென்ற பழச்சாற்றால் மூன்றுநாள்தான் விடிகாலை மாலைரெண்டு சாமமாட்டி, கோனென்ற வில்லைசெய்து ரவியிற் போட்டு கூறாக உலர்ந்தபின்பு புடத்தைப்போடே. 95

போட்டெடுத்து காலிலொன்று கெந்திகூட்டிப் புகழான பொற்றலையின் சாற்றாலாட்டி, மீட்டெடுத்து வில்லைதனை உலர்ந்தபின்பு வெகுசுருக்கா யைம்பதெருப் புடைத்தைப்போடு, மூட்டெடுத்த கருவங்கஞ் செந்தூரந் தான் மோசமில்லை முக்காலும் புடத்தைப்போடு, சூட்டெடுத்துப் பொடி செய்து பதனம்பண்ணு துடியாகக் குன்றியிடை கொள்ளுகொய்யே. 96

கொள்ளப்பா அமுர்தசஞ் சீவிதன்னிற் கொண்டபின்பு சலக்கழிச்சல் கடுப்புரத்தம், விள்ளடா குதியெரிப்பு விங்கப்புற்று மேகத்தி னாலெழுந்த தோஷமெல்லாம், எள்ளடா அணுவளவு கற்பத்தாலே யெழுந்ததொரு மேகசல முறிந்துபோச்சு, தள்ளடா எமனாணை வாசிகொண்டு சாற்றடா மண்டலந்தான் சித்தியாமே. 97

## அயச்செந்தூரம்.

ஆமப்பா அயத்தகடு பலந்தானென்று அப்பனே அந்திடைக்குச் சூதங் கூட்டி, வேமப்பா கல்வத்தி லாட்டுருட்டு வீரமொடு நவச்சாரம் பலந்தா னென்று, வாமப்பா மூன்றுநாள் கைவிடாமல் மாட்டியரைப் பொடியாகச் சிவந்துபோகும், மோமப்பா புதுச்சட்டி யடுப்பில்வைத்து மோசங்கள் வாராமல் வறுத்திடாயே. 98

வறுக்கையிலே பதம்பாரு முருக்கம்பூப்போல் வர்ணபதத் தோடு கருகாமல்வாங்கு, இறுக்கையிலே குன்றியிடை பனைவெல்லத்தில் நேசமாம் கொண்டிடவே சூலைவாங்கும், ஒறுக்கையிலே யிதின்சுறுக்கு எதுக்கு மில்லை ஓகோகோ குஷ்டமெல்லா மொழிந்துபோகும், மறுக்கையிலே யிதின்சுறுக்கு எதுக்குமில்லை வாதநீர் விஷகடிகள் வாங்கிப்போமே. 99

## துரிசிசெந்தூரம்.

வாங்கிப்போந் துரிசிசெந் தூரங்கேளு வாகான அரைப்பொடி தான் பலந்தானென்று, தேங்கிப்போங் கெந்தகந்தான் பலந்தானென்று திறமாக வதன்பின்பு செப்பக்கேளு, தாங்கிப்போந் துரிசிமதிற் பலந்தா னென்று சாதகமாய்ப் பழச்சாற்றில் தினம்ரெண்டாட்டு, ஓங்கியதோர் வீரமது கழஞ்சியொன்று உத்தமனே அரைத்ததனை வில்லைகட்டே. 100

கட்டியே ரவிதனிலே யுலர்ந்தபின்பு கனபுடமே போடப்பா மயங்க வேண்டாம், ஒட்டியே ஆறினபின் செந்தூரந்தா னுண்மையாய்த் திரிகடுகெல் குன்றியிடைகூட்டி, அட்டியாய் மண்டலந்தான் கொள்ளும்போது ஆச்சரியங் குன்மமென்ற தெல்லாம்போகும், சுட்டியே கெற்பத்தில் தோஷம் போகுந் துடியான கிருணியெல்லாஞ் சுட்டப்போமே. 101

## அயக்காந்தச்செந்தூரம்.

சூட்டப்பா வரைப்பொடிதான் பலந்தானென்று துடியான கெந்தகந் தான் பலந்தானென்று, மூட்டப்பா லிங்கமொடு காரசாரம் முனையான உப்புரெண்டு முடன்சீனம், மாட்டப்பா வகையொன்று கழஞ்சியொன்று வாதியென்ற பூவதிலே கழஞ்சியொன்று, வாட்டப்பா காந்தமது பலங்கால் கூட்டி வளமான பழச்சாற்றி லரைத்திடாயே. 102

அரைத்திடுவாய் ரெண்டுநாள் கைவிடாமல் அப்பனே உலர்த்தபின்பு வில்லைதன்னை, விரைத்திடுவாய் வராகபுட மாறிப்பின்பு விளங்கியதோர் முருக்கம்பூப் போலாம்வில்லை, நிரைத்ததனைப் பொடிசெய்து பதனம் பண்ணு நிலையில்லாப் பாவியென்ற பாண்டுரோகம், கரைதடுக்க வொட்டாது கடலேபுக்குங் கைகண்ட செந்தூரங் கண்டுகொள்ளே. 103

பாண்டுலேகியம்.

கண்டுகொள்ளு மாவின்பால் படிதானொன்று கைலோகம் நன்னாரி விலாமிச்சம்வேர், விண்டுகொள்ளுங் கீழ்க்காயின் நெல்லிவேரும் விளங்கிய தோர் வகையொன்று பலந்தானொன்று, உண்டுகொள்ளும் படியெட்டுச் சலத்திலுள்ளே உத்தமனே போட்டுலர்த்திப் படிதானொன்று, மண்டுபடாப் பாலுடனே கூடவாரு மைந்தனே கமுகம்பூச் சாறுவாரே. 104

வாரப்பா படியொன்று பழச்சாறங்கே வரிசையாய்ப் படியொன்று கரி யான்சாறு, சேரப்பா படியொன்று கீழ்காய்நெல்லித் தெளிவாகத் தாழைச் சாறு படிதானொன்று, சாரப்பா ரெண்டுபத்துப் பலந்தான்வெல்லந் தான் கரைத்து எரிவிடவே பாகுசேரில், ஏரப்பா திரிபலைசீ ரகத்திரண்டு மியல்பான திரிகடுகு எலந்தானே. 105

ஏலமில வங்கத்தோ லிலைகிராம்பு எவாச்சாரஞ் சாதிக்காய் நறுக்கு மூலம், வால்மிளகு வாய்விளங்கம் கோட்டமப்பா வகையொன்று பல மொன்று சூரணித்து, ஆலைவாய் சங்குபொடி யதிலேபாதி யப்பனே பாகு வரும் போதிற்போடு, சாலவே ஆவின்நெய் படிதான்வாரு தவறாமல் தேனதிலே பாதிவாரே. 106

வார்த்திடவே மெழுகுபத மானவாறில் மக்களே பீங்கானிற் பதனம் பண்ணு, கோத்திட்டு லோகசெந்தூ ரத்தில்தின்று குன்றியிடை தின மொன்றுக் கிருநேரந்தான், சாத்திடவே லேகியந்தான் கழஞ்சரெண்டு சாதித்து மண்டலமே தின்பாயாகில், எத்திட்டு எந்தவகைப் பாண்டானா லும் இலேகியசெந் தூரத்தைக் கண்டபோதே. 107

கண்டவுடன் பாண்டங்கே பறந்ததப்பா காயங்கள் வெளுத்திருந்த தெங்கேபோச்சு, கொண்டவுடன் புளியோடு புகையிலையுமாகா கொடுமை யுள்ள பெண்ணோகா துளுந்துமாகா, பண்டுடைய பத்தியத்தை விட்டானா னால் படுபாவி லேகியசெந் தூரந்தானே. சண்டமா ருதம்போலே மெய் யழித்துச் சண்ணுமடா மாற்றுமருந் தில்லைதானே. 108

மண்டூரசெந்தூரம்.

இல்லையென்று போகாமற் சொல்லக்கேளு எலுமிச்சம் பழம்பத்து காலாய்க்கீறி, தொல்லையென்று போகாமல் அயசசெந்தூரந் ஆக்கடா பலங் கால்தான் மண்டூரத்தைச் சொல்லவே சமனாகச் சேர்த்திட்டுத் திறமாகப் பழச்சாற்றால் ரெண்டுசாமம், அல்லவோ அரைத்துவில்லை யுலர்த்தபின்பு அப்பனே வாராகப் புடமாறிப்பின்பு, நல்லதொரு செந்தூரங் கால்பலமே தாக்கி வகையான இந்துப்புக் கழஞ்சிரெண்டுகூட்டே. 109

கூட்டியே முன்மருந்து மொன்றாய்ச்சேர்த்துக் கொண்டுநீ சேரகமோர் கழஞ்சுகூட்டி, நாட்டியே பழத்துக்குச் சேரவிட்டு நலமான கரியான்சாறு நாழிவிட்டு, மூட்டியே கற்றாழஞ் சாறுநாழி முழுகுகின்ற செருப்படியின் சாறுநாழி, தாட்டிகமாய் மூன்றுமொன்றாய்ச் சாறுவார்த்து சட்டியிலே பழத்தையெல்லாம் பதித்துவையே. 110

பதித்துவைத்துத் தீயெரித்து அவித்துக்கொண்டு பாங்கான பக்குவத்தில் புதுப்பாண்டத்தில், பதித்துவைத்து நெற்குழியில் பத்துநாள்வை பசுவிளுட தொழுவத்தில் பத்துநாள்வை, பதித்துவைத்துப் பழந்தன்னைத் தினமொன்றாகப் பத்துநாள் கொள்ளப்பா பாண்டுபோகும், பதித்திருந்த வாதநீர்ப் பாண்டாலும் பறக்குமடா பறக்குமடா [பாண்டெல்லாமே. 111

எல்லாரும் வயித்தியன்போல் நோவுபார்த்தால் இளைத்ததுவோ நோயப்பா வேழைமாண்பர், வல்லாரும் வாதிமகன் வயித்தியனுவான் மற்றவர்கள் நோயறியா மடையரப்பா, கொல்லுமடா கெந்தகத்தை வாங்கிநீயுங் கூட்டிடுவாய் சமனின்ற விடந்தீஞ்சானைக், கல்லான கெந்தகமாஞ் சாமமொன்று காணப்பா அரைத்துவில்லை கட்டிப்போடே. 112

கட்டிபடா அஞ்செருவிற் புடத்தைப்போடு கலங்காத கெந்தகந்தான் என்னசொல்வேன், வெட்டுமடா குஷ்டமொடு கிரந்திசூலை வெல்லுமடா ரூதபற்பங் கூட்டித்தின்று, பட்டுவிடு மேகமிற மேகசூலை பறக்குமேமேகத்தி லெழுந்தவாய்வு, திட்டமடா பத்துநாள் கொள்ளும்போது சித்தியடா கற்பத்துக் குறுதிகாணே. 113

வெண்கலச்செந்தூரம்.

உறுதியென்ற வெங்கலச்செந் தூரங்கேளு உத்தமனே வெங்கலந்தான் பலந்தானென்று, அறுதியென்ற சிலாசத்துப் பலந்தானென்று அண்டத்தோல் பலமொன்று குடிலமொருபலந்தான், விறுதியென்ற வீரமது பலந்தான்ரெண்டு வீரன்தாளகந்தான் பலந்தான்ரெண்டு, பொறுதியென்ற கெந்தகந்தான் பலந்தானாறு போட்டரைப்பாய் கல்வத்திற் பழச்சாற்றாலே.

பழச்சாறு விட்டரைப்பாய் மூன்றுநாள்தான் பாங்காக வில்லைசெய்து ரவியிற்காய்ந்தால், வழைச்சல்லோ போட்டுதடா மாட்டிக்கொண்டு வராகபுட மானதிலே செந்தூரந்தான், இழைச்சல்லோ வெல்லத்திற் குன்றியிடைகொள்ள என்னசொல்வேன் குன்மங்க ளெட்டுந்தீருந், தழைச்சிருந்த மேகத்தி லெழுந்ததெல்லாந் தவறண்டே போகுமடா சார்ந்துபாரே. 115

முத்துச்செந்தூரம்.

பாரப்பா முத்துமணிப் பலந்தானென்று பதைப்படங்கா நாகமது பலந்தானென்று, சேரப்பா ரூதமொடு பலந்தானென்று சிறப்பான வீரமொடு பலந்தானென்று, வாரப்பா முலைப்பாலி லரைப்பாயோர்நாள் வாகாக வில்லைசெய்து ரவியிற்போடு, வேரப்பா பூக்கழஞ்சி கெந்தகந்தான் விளக்கவே ரெண்டுபலங் கூட்டி... 116

ஆட்டியே புடம்போடு கோழியப்பா அரகரா முத்துமணிச் செந்தூரந் தான், நாட்டவே கிரந்தியுறும் யோனிப்புற்றும் நல்லிலிங்கப் புற்றுடனே கண்டமாலை, மூட்டவே மூலங்கள் பிளவையரையாப்பு மூக்கிலுள்ளே சதைத்துணுக்காம் பீனிசங்கள், காட்டவே செந்தூரங் கண்டபோதிற் காணப்பா கெடிகலங்கி யோடுந்தானே. 117

தாளகச்செந்தூரம்.

தானான தாளகந்தான்பலந்தானொன்று சம்பழத்தின் சாறுபடிசுறுக்குப் போட்டு, வேனான முலைப்பால்கால் படியேதாக்கு விளங்கவே பூரலறும் பின்புகேளு, வானான திருகுகள்ளிப் பால்தானுழி வாங்கியதிற் போடுகிற மருந்துகேளு, கோனான திருகுகள்ளி உப்புபூவுங் கொடியநவச் சாரமொடு வீரந்தானே. 118

வீரம்பூரத்துடனே வெடியுப்புச்சீனம் விளங்கவே வகையொன்று கழஞ்சியொன்று, சேரவே பொடித்தக்தப் பாலிற்போடு சிறப்பாக மூன்றுநாள் செலமதாகும், நீராலே தாளகத்திற் காரங்கால்தா னிறுத்துவிடு முன்சொன்ன பலவிதத்திற், சாரமது கால்பலந்தான் கூட்டிக்கொண்டு சாகவே யரைத்திடுவாய் மூன்றுநாளே. 119

நாள்மூன்று அரைத்துவில்லைப் பணம்போற்கட்டி நலமாகச் சுத்திசெய்வாய் தாம்பிரத்தைக், கோள்மூன்றாய்த் திருமப்பா ஆரல்வாங்கும் கூறுவேன் அண்டத்தோல் பலந்தானொன்று, கேள்மஞ்சள் கட்டான வளையலோடு கெடியான வெடியுப்புக் காரஞ்சாரம், பாள்காணப் பூவீரம் பூரஞ்சீனம் பாங்காக வகையொன்று கழஞ்சிரெண்டே. 120

ரெண்டுடனே யண்டோடு கூட்டிக்கொண்டு நிரைபழச்சா றரைப்படிதான் விட்டேயாட்டிக், கொண்டுடனே வில்லைசெய்து உலர்த்திக்கொண்டு கொடுத்திடுவா யொவ்வாத ராசிக்கேதான், பண்டுடனே தாம்பிரமது பலந்தானஞ்சு பாங்காகக் குகைக்குள்ளே உருகும்போது, தண்டுடனே தாம்பிரத்திற் பிலத்தசுத்தி, சண்டாள ஆரலறுந் தாம்பிரந்தானே. 121

தானன்றாய்ச் சுத்திசெய்து தாம்பிரந்தன்னைத் தடையதவே மறுகுகையி லுருக்கும்போது, ஏனென்ற தாளகத்தின் மெழுகுவில்லை இயைந்திடுவா யொவ்வொன்றாய்க் கொடுத்தபின்பு, தேனென்ற நிறம்போச்சு வெங்கலம் போலாகும் திடமாக வடித்துடனே தகர்ந்துதூளாம் பானென்ற கல்வத்திற் பொடித்துக்கொண்டு பாங்காகக் கண்டிடைக்குச் சூதம்வாரே. 122

சூதத்தி னிறைபோடு வீரந்தன்னைத் தூடியாக முலைப்பாலி லரைத்த பின்பு, காதம்பூ நீறுரெண்டு பத்துக்கொன்று நாட்டியரை மூன்றுநாள் பின்புகேளு, பாதமென்ற வாலரச மட்டைப்போலாம் பண்பாகக் கண்டிடைக்குக் கெந்திகூட்டி, நீதமென்ற பொற்றலையின் சாற்றாலாட்டி மிலைத்திடுவா யைம்பதெருப் புடத்தைப்போடே. 123

புடத்திலே யிருந்துறைந்த செந்தூரந்தான் புகலாதே வயிரவர்க்குப் பூசைபண்ணு. திடத்திலே தாம்பிரத்தின் செந்தூரத்தைத் தினங்குன்றிப் பிரமாணம் திரிகடுகித்சேர்த்து, நடத்திலே மண்டலந்தான் உண்ணும் போது நாளான பீலிகையுங் குன்மத்தோடே, சடத்திலே உண்டான கனப்புவாய்வு, சாங்கமாய்த் தீர்க்குமடா தாம்பிரந்தானே 124

தாம்பிரசெந் தூரத்தைத் தின்னும்போது தட்டுண்டு குன்மம்போமறுப் பானங்கேள், காம்பியே புளித்திருந்த காடிபடியொன்று கண்டங்கத் திரிச் சாறு படிதானென்று, தேம்பியதோர் திருமேனிச் சாறுபடியொன்று சிறு செருப்புக் கால்சாறு படிதானென்று, வேம்பினுட பட்டைச்சாறு படிதா னென்று மேலான கையான்சாறு படிதானென்றே. 125

ஒன்றான விஞ்சிச்சாறு படிதானென்று உத்தமனே பசுமலையின் பட் டைதன்னை, நன்றாக வெண்படிகா ரொருபடியிற்காய்ச்சி நலமான கஷாய மது படிதானென்று, மன்றாகப் பிரமிச்சாறு படிதானென்று வாகாக விது வெல்லாந் தாளிக்குள்ளே, சென்றாட வொன்பதுசா ரொன்றாய்ச்சேர்த் துச் செப்பக்கேள் பனைவெல்லம் சேரப்போடே. 126

போடக்கேள் மூன்றுபத்துப் பலந்தான்போடு புகழான வெள்ளெருக் கம் வேர்ப்பச்சைப்பட்டை, ஆடப்பா பலமொன்று அரைத்துக்கொண்டு அப்பனே ஐம்பதுகாய்க் கச்சல்வாங்கி, சூடப்பா நன்றாக நறுக்குத்தட்டி சுகமாக அரைத்திடுவாய்ப் பின்போலாகத், தேடப்பா விருமருந்துஞ் சாற்றினோடே சேர்த்துநீ கரைத்திடுவாய் செப்பினேனே. 127

செப்பினேன் உனக்காகப் புலத்தியனே அய்யா தீராத குன்மமெல் லாஞ் சேரத்தீரும், செப்பினேன் சோதிநீர் பலந்தானென்று திரைநுரை யின் நீறுபலஞ் சங்குநீறு, செப்பினேன் பலமொன்று பூநீறப்பா சேர்வே யிதுவெல்லாஞ் சுட்டசுண்ணாஞ், செப்பினேன் திரிகடுகு வாய்விளங்கந் திப்பிலிமூ லத்திடனே சித்திரானே. 128

சித்திரமூ லத்திடனே கடுகுரோகமம் செவ்வியங் கோஷ்டமதாஞ் சீர கந்தான், முத்திரையாங் காயமொடு வசம்புகாந்த மூளந்தவே வகை யொன்றுக் கரைப்பலந்தான்சேரு, சத்தியெலாச சாரம்நவாச் சாரம்சீனம் சவுக்காரம் பொரிகார மிணங்கன்குடன், பத்தியாய்க் கொடிக்கழற்சிப் பருப்பித்துப்பு பாங்கான கல்லுப்புப் பாதிசேரே. 129

பாதியாம் வகையொன்று காற்பலந்தான் கூட்டிப் பண்பாகச் சரக்கெல் லாம் சூரணித்துக்கொண்டு, நீதியாங் கருவேம்பி னிலையை வாட்டி நேரா கச் சூரணித்து மருந்திற்சேர்த்து, சாதியாஞ் சாறெல்லாம் பாகுசேரில் தக்கவொரு சூரணத்தை யதிலேபோட்டு, கோதிலாத் தேனுமொரு படிதான்வாரு கூறான நெய்யுமொரு படிதான்வாரே. 130

வாரப்பா மெழுகுபத மானவாறே வாய்ப்பாகப் பீங்கானில் வழித்து வைப்பாய், சேரப்பா லேகியந்தான் கழஞ்சியள்ளிச் சிறப்பாகத் தாம்பிரச் செந்தூரத்தைச், சாரப்பா குன்றியிடை யாகக்கொள்ள சாந்தமாம் புகை யிலையும் புளியுந்தள்ளு, வேரப்பா அஷ்டகுன்ம மெட்டுந்தீரும் வெகு சுறுக்கு நவசிந்தா மணியென்றேனே. 131

நவசிந்தாமணி.

நவசிந்தா மணியான லேகியத்தை நல்லதொரு கற்பசித்திக் காகச் சொன்னேன், புவனங்கள் திரிந்தலையும் வயித்தியனேகாண்பான் புத்தி யுள்ள வாதிமகன் குன்மந்தீர்ப்பன், எவராலுந் தாம்பிரத்தைச் செயிக்க மாட்டார் இந்தவகை லேகியமுன் செய்யமாட்டார், அவன்பிழைப்புக் கே தானு மொன்றைச்செய்வா னாகாத வயித்தியனு மாமென்றேதே. 132

ஒதினேன் தீட்சையிரு நூற்றுக்குள்ளே உத்தமனே வடுகனுட பூசை மார்க்க, மாதியாம் வயித்தியனுக் கப்பாகேளு அவனன்றிச் செந்தூர மாகா தொன்றுஞ், சாதியாம் சூத்திரசென் மத்தோர்க்கன்றிச் சகலருக்கும் பலி யாது தவறுண்டேபோம், வாதியா மகன்றனக்கு வயித்தியஞ் சொன் னேன் வயிரவனைப் பூசைபண்ணி வணங்கிப்பாரே. 133

அயக்காந்தச்செந்தூரம்.

பாரப்பா அரைப்பொடிதான் பலந்தானென்று பரிவான காந்தமது பலந்தானென்று, சேரப்பா கெந்தகந்தான் பலந்தானென்று திரமான பூநீறு கழஞ்சியொன்று, காரப்பா பழச்சாற்று லிரண்டுசாமங் கடுகவே யரைத்துவெய்யிற் காயப்போட்டு, ஆரப்பா மறுநாளும் ரெண்டுசாம மடங்கவே யரைத்துவில்லைக் காய்ந்தபின்பே. 134

பின்பதனைச் சுடுசெங்கல் குகைக்குள்வைத்துப் பேசாமல் மேலுமதால் மூடிக்கொண்டு, வின்பதனைச் சீலைமண்தான் ரெண்டுசெய்து விதமாக முட்டளவு குழிதான்வெட்டி, அன்பதெருக் குள்ளேதான் புடத்தைப் போடு ஆறியபின் னெடுக்கச்செந் தூரமாகுந், துன்பமது கற்பத்தாற் குடி கொண்ட தோஷோடு அஸ்திமுதற் கனப்பும்பாரே. 135

கனத்திருந்த நிர்தோஷங் கபாலவாய்வு கண்புகைச்சல் காதுமந்தங் காணுதோடு, மனத்துறவே சாதிக்காய் சாதிபத்திரி மதுரஞ்சி ரசமோமம் குருசாணியோடு, இனத்திருந்த வாய்விளங்கம் நறுக்குமூல மேலமதி விடையமொடு காயஞ்சுக்கு, தனத்திருந்த திப்பிலியு மினகுங்கூட்டிச் சதி ரான அபின்கோஷ்டந் தானென்றுமே. 136

ஒன்றான மருந்தெல்லாம் வகைக்குக்கேளு உறவாகப் பலமொன்று வறுத்துக்கொண்டு, நன்றாகச் சூரணித்துப் பின்புகேளு நாலுபலம் பனை வெல்ல மெள்ளுஞ்சேர்த்துக், குன்றும லிடித்ததனை மையாய்ச்சேர்த்துக் கூட்டப்பா சூரணத்தை ரேகித்தேதான், சென்றுமே நறுந்தேனைக் கால் படிதான்விட்டுச் சிறக்கவொரு பீங்கானி லடைத்துவையே. 137

அடைத்துவைத்த மருந்தப்பா கழஞ்சிரெண்டு அயக்காந்தச் செந்தூரங் குன்றிகூட்டி, இடைத்துவிடு மண்டலந்தான் தின்னுதின்னு வெளிதல்ல ஆறுவகைக் கிராணியெல்லாஞ், சடைத்தங்கே யோடிப்போம் புவியுள் ளோர்க்குத் தாக்கினுற் புளியோடு புகையிலையுமாகா, உடைத்துவிடு முத ரத்தில் நின்றவாய்வு ஓமுடிந்து போகுமடா உண்மைகாணே. 138

வெள்ளியச்செந்தூரம்.

காணப்பா வெள்ளியஞ் சுத்திசெய்து கசகாம லுருக்கியே கல்வத்திட்டு, பூணப்பா வெடியுப்பு ரோமப்பூவும் புகழாகப் பலத்துக்குக் கழஞ்சிவீதம், தோணப்பா ராசிவங்கம் பலந்தானென்று தடிகொண்ட கெந்தகந்தான் பலந்தான்ரெண்டு, நாணப்பா பழச்சாற்று லிரண்டுசாமம் நன்றாகவரை த்துவைப்பா யெருக்கம்பாலே. 139

பாலாலே சாமம்ரெண்டு ஆட்டிக்கொண்டு பதைப்படங்கா நவச்சார பலமுங்கால்தான், வாலாகப் பொற்றலையின் சாற்றாலாட்டி மாட்டுவாய் சாமம்ரெண்டு மடங்குமப்பா, சேலாக வில்லைசெய்து ரவியிற்போடு திம் மாக மூன்றுநாள் காய்ந்தபின்பு, காலாக நூறெருவிற் புடத்தைப்போடு சைமுறையாய் ராசிவங்கங் கனகந்தானே. 140

கனகந்தான் ராசிவங்கஞ் செந்தூரத்தைக் கைமுறையா யெட்டிலொன் றுஞ் சூதங்கூட்டிக், கனகந்தான் றேகமப்பா சீனியிற்கொள்ளக் கண்டூலங் குங் கபாலபுற்றுக் கபாலவாய்வு, கனகந்தான் அஸ்தியிலே பாய்ந்தவெட் டை கசுமாலக் குன்மமொடு கண்டமாலை, கனகம்போ லுறைந்திருந்த நோய்களெல்லாங் காணுதே கடல்புக்குங் கருத்துள்ளோர்க்கே. 141

கருத்துறவே வாதிமகன் வயித்தியஞ்செய்தால் கதிகெட்ட நோயாளி பணியவேணும், கருத்துறவே மருந்துக்குப் பத்தியம்வேணுங் கைமுறை யாய்ச் செய்கின்ற வயித்தியர்க்கும், கருத்துறவே மனதுவா நடக்கவேணுங் கழுதைபோ லேயிருந்தால் பலியாதென்றுங். கருத்துறவே யிதுக்கல்லோ சித்தர்சாபங் கட்டினர் மனதுவர நடந்துகொள்ளே. 142

நடந்துகொள்ளோ நோயாளி ராசாவென்றால் நாட்டிநா லவர்க்கங்கே மருந்தேறாது, தொடர்ந்துகொள்வே னென்றுன்னைப் பத்திவைத்தால் சுறுக் காகத்திருமடா சாபமேது, அடர்ந்துபோ யவன்வாசல் காத்தாயானால் அவ னுக்குக் கொஞ்சமுமே உபசாரஞ்செய்யான், சடந்தனுக்கு நோய்வந்தால் குருவேயென்பான் சாதுரிய மாய்த்தீர்ந்தால் தம்பியாமே. 143

தம்பியென்பான் நோயெல்லாந் தீர்ந்தபின்பு தாய்தந்தை குருவென்பான் நோய்தீராமுன்பு, வெம்பியதோர் மனமாகி வயித்தியனைப்போற்றி வேணப டி யுபசாரம் பின்பாகட்டென்பான், கும்பியல்லோ கொதிக்குதென்று வுள் ளம்நொந்து கொண்டங்கே வயித்தியனுர் கூர்மைக்கேதான், சம்பியே முகம் வாடிச் சாபம்வேறே சாற்றினே னிதுவறிந்து மருந்துவாங்கே. 144

வாங்கியே விசுவாச மாகக்கொண்டால் மருந்தென்ன வயித்தியன்கைப்
பட்டாற்போதும், ஏங்கியே திரியாதே வயித்தியசாப மேவிடவே சாபத்தினி
விர்த்திகேளு, ஓங்கிலியோம் விந்துவுட னாதங்கூட்டி உறவாகச் சிங்சென்று
ஒருலட்சந்தான், பாங்கியே வடுகனுட சாத்தியந்தான் பார்பிரமன் மாய
னோடு பகரக்கேளே. 145

வயித்தியமுறைமை.

கேளப்பா வயித்தியந்தான்!சொற்படியேகேட்கும் கெடியாகச் சித்தருட
மறப்பையெல்லாம், வாளப்பா வெளியில்விட்டேன் வயித்தியத்துக்காக மா
கிலத்து நோயாளி மயங்காமலய்யா, கோளப்பா வாராமற் சாபகோபங் கூறி
னேன் வாதிமகன் வயித்தியனுகில், தேளப்பா கொட்டுதல்போல் பூவி
னீறு சேராட்டால் செந்தூரஞ் சேரப்போச்சே. 146.

போச்சுதென்று மலையாதே சொல்லக்கேளு புகழான பூநீறு பலந்தானொ
ன்று, காய்ச்சென்றேன் சுத்தஜலந் தன்னிற்காய்ச்சிக் காய்ச்சுவதுகடு வெய்யி
லில் நீரேவற்றி, வாச்சென்றேயிருக்கும்பூ மாதளங்காய் மகத்தான பூவப்பா
வித்தச்சுன்னம், பாச்சென்றேன் நிலவுப்பு மந்தசுத்தி பண்ணப்பா பாறையுப்
பு மந்தப்பாங்கே. 147

பாங்குடனேமுப்பூவும் வெடியுப்போடு பழிகாரச் சூடனொடு அஞ்சும்நே
ராய், வாங்கியே கிழிஞ்சியுட சுன்னந்தன்னை வரிசையாய்ச் சமபாக மாகவா
ட்டித், தாங்கியே வெள்ளெருக்கம் பாலுவார்த்துச் சாரமாம் பழச்சாறுந் தா
ன்வெவ்வேறே, யோங்கியே யிருசாமம் ரெண்டுநீரு முத்தமனே யரைத்து
வில்லை ரவியிற்போடே. 148

போடப்பா பத்துநாள் காய்ந்தபின்பு புகழான சுண்ணாம்பு பொடிக்குள்
வைத்து, சூடப்பா கமலம்போல் தீயைமூட்டித் துடியாக விருசாமஞ் சேரநீ
ரும், மாடப்பா விதினுட்டுச் செந்தூரத்தாட்டு வடங்காத நோய்களெல்லா
யகன்றபோகுந், தேடப்பா சிப்பியுட சுன்னஞ்சொல்வேன் திரமான பூநீற்
றின் குருவிதாமே. 149

கிளிஞ்சிற்சுன்னம்.

குருவாகுங் கிளிஞ்சியுட சுன்னமப்பா கூறக்கே ளூமைதன்னைச் சுன்ன
ம்பண்ண, கருவாகுங் கற்சுன்ன முவருங்கூட்டிச் சாதகமாய்ச் சுத்தசலந்
தன்னிலேதான், திருவாகக் கரைத்ததிலே கிளிஞ்சியிட்டுத் தீயெரிப்பா
யிருசாமஞ் சென்றபின்பு, அருளான வுமைதனைப் பேசப்பண்ணி ஆச்சரியம்
உள்மருந்து பூசக்கேளே. 150

பூச்சப்பா வீரமொடு சூடன்சீனம் புழுகுநவச் சாரமொடு கல்லுப்போடு,
வீச்சப்பா வகையொன்று பலந்தானென்று, மீறியதோர் கிளிஞ்சியது பலந்
தான்பத்து, ஆச்சப்பா மருந்தெல்லா மரைக்கும்போது அண்டத்தின்நீறு ப
லம் ரெண்டுபோடு, நீச்சப்பா பழச்சாற்றி லரைத்துக்கொண்டு சிறக்கவே
யுடன்பூசிப் புடத்தைப்போடே. 151

புடம்போடு நூறெருவிற் பிலத்தசுன்னம் பின்பொருக்கால் வெண்கரு
வாலையைத்தா னரைத்து, திடமாகச் சுருக்கிட்ட சுன்னமாகுஞ் செய்கின்ற கைமு
றைக்குச் சோபலராம், நடமாட வெளுக்குமட்டும் வெண்கருவாலாட்டி
நாலாறு புடம்போடு கடியசுன்னம், உடனேடு சத்துருவா மண்டநீறும் உற்ற
தொரு சிவிர்ந்திதன்னை மடக்கலாச்சே. 152

மடக்குமடா புலத்தியனே யுனக்குச்சொன்னேன் வரிசையா யண்ட
மது பத்துவாங்கி, இடக்குமடா பாண்டத்துள் பீங்கான்வைத்து, கெடியாக
வதிலிட்டுப் பழத்தின்சாறு, கடக்குமடா படியொன்று அமுக்கவாரு
கடுக்காரச் சீனமது கழஞ்சிரெண்டு, அடக்குமடா பொடிசெய்து வதிலே
போடு ஐந்துநாள் கடுவெயிற்கு ளண்டநீறே. 153

அண்டத்தின் றோடெல்லாம் உருகிச்சாற்றி லப்பனே உறைந்திருக்கு
மெடுத்துக்கொண்டு, அண்டத்தைச் சவ்வுடனே யெறிந்துபோட்டு அழ
கான பழச்சாறுஞ் சீனத்தோடு, பிண்டத்தைக் கொல்லுமே யென்று
சொல்லிப் பேரிட்டு மூன்றுநாள் ரவியில்நீறும், அண்டத்தி னீறுதனைக்
கல்வத்திலிட்டு அதிகாரி யெருக்கம்பா லதனிலாட்டே. 154

ஆட்டுவா யிருசாமம் வில்லைசெய்து அப்பனே ரவிமுகத்திற் காய்ந்தபி
ன்பு, மூட்டுவா யைம்பதெருப் புடத்தைப்போடு முக்கியமாய் நீறும்பின் னெ
டுத்துக்கொண்டு, நாட்டுவாய் பத்திலொன்று வீரங்கூட்டி நலமான வெண்
கருவா லரைப்பாய்சாமம், பூட்டுவாய் வில்லைசெய்து ரவியிற்காய்ந்தால்
புடமொன்று ஐம்பதெருக் குள்ளேபோடே. 155

போட்டெடுத்த அண்டத்துப் பொலிந்துநீராம் போக்கோடே யிந்தவகை
யாருஞ்சொல்லார், தாட்டிகமா யூமைதனைச் சண்ணித்துஞ் சனவட்டக்
குருவல்ல அண்டவித்தை, மாட்டவே வாதத்தி லேறுஞ்சுண்ணம் வளமாக
நவச்சாரம் சமனாய்க்கூட்டி, மூட்டிலேகொட்டங் கப்பணியில் வைக்கநீராம்
முறையோடெழுதற் குத்துருசி முந்தக்கொல்லே. 156

கொல்லுமடா அண்டநீர் கோபமெத்தக் கொடும்பாவி யுபரசத்தி லாதி
சுன்னம், கொல்லுமடா சிப்பிதனைக் கொன்றுற்கேளு கூறுகிற சிப்பிவித்தை
தொலையாதப்பா, கொல்லுமடா சிப்பிசுன்னத் தாலேகேளு கொத்தான
சவுக்காரம் செய்யும்போது, கொல்லுமடா பூநீறு கல்லுப்பைத்தான் கூசா
மற் பாறையுப்பைக் கொல்லுந்தானே. 157

நாமென்ற சவுக்கார மேதாலாச்சு தருவாகிக் கருத்திருந்த கொடியசி
ப்பி, வாவென்ற அண்டத்தினீராற் சிப்பி மகத்தான சுன்னமடா ஆதியாதி,
வேமென்ற வாதத்திபத்தைத விள்ளப்போய்த்தான் வேறான வழிலையுமுஞ் சிப்
பிச்சுண்ணம், நாலன்றுஞ் சொல்லிவிட்டே னிதுபொய்யாது நலமான
அண்டத்தாற் சிப்பிநீறே. 158

அண்டத்தின் சிப்பிதன்னைச் சுன்னமாக்கி அரகராசவுக்காரம்செய்வ யாகில், தெண்டனிட்டு வாதம்வந்து முன்னேகாணுஞ் செப்பினேன் புலத்தியனே செப்பக்கேளு, கண்டதொரு குருவென்பார் பூச்சாரென்பார் கைமுறையாய்க் காணார்கள் கழுதைமாண்பர், விண்டதொரு பூநீறுஞ் செய்யமாட்டார் விளக்கவே சொல்லிவிட்டேன் வேதைபாரே. 159

பாரப்பா சட்டைமுனி பூநீற்றுவித்தைப் பாடினார் பூவதனைக் குருபண்ணுமற், கூரப்பா சொல்லுகிறேன்;பூநீறுக்குக் கொடியதொரு சிப்பிசுன்னம் பலந்தானொன்று, சேரப்பா சோடகத்தின் குருத்தானன்றிச் செகமறியாப் பூநீறு செப்பக்கேளு, சாரப்பா முதற்றீட்சைப் பூவைக்கேளு சாதகமாய் நாலுபலம் தாக்கியாட்டே. 160

தாக்கிடாய் நிலவுப்புப் பாறையுப்புத் தன்னோடு வகையொன்று பலத்திற்பாதி, தாக்கிடா யுப்புக்குப் பாதிவெள்ளை.சவ்வீரம் வெள்ளைக்கு நாலிலொன்று, தாக்கிடாய் சூடனங்கே பலமுங்கால்தான் தயவான புழுகதிலே கழஞ்சிகூட்டு, தாக்கிடாய் வண்டரிசி கழஞ்சிகூட்டிச் சாதகமாய் மருந்து ஒக்க அரைக்கக்கேளே. 161

அரைத்திடுவாய் சாமமொன்று பழச்சாற்றாலே அப்பனே!யெருக்கம்பால் சாமமொன்று, அரைத்திடுவாய் வெண்கருவால் சாமமொன்று அரியதொரு கடுக்கார மெத்தவேண்டாம், அரைத்திடுவாய் வில்லைசெய்து ரவியிற்போட்டு அப்பனே பட்சமொன்று காய்ந்தபின்பு, பரைக்காதி சிவபூசை பாங்காய்ப்பண்ணு பரிவாகச் சுன்னத்தி லெரித்திடாயே. 162

எரித்திடுவாய் முத்தியு மூன்றுசாமம் என்னசொல்வே னதிகுரு வானவாறு, தரித்திரம்போம் வாதமுள்ளாஞ் சவுக்காரமென்ன தாளிப்பார் தாளிப்பா ரெண்ணெய்வாங்க, எரித்திடுவாய் வாட்டிடுவார் வறுப்பார்கோடி யிதமாகப் புடத்தினிலே வைப்பார்கோடி, பெருத்ததொரு வித்தையிது சித்தர்க்காகும் பேசாதே உலகத்தோர் பிழைக்கும்வாறே. 163

வாறான உவர்ப்பூவைக் குருவாய்ச்செய்ய மாட்டினேன் சவுக்காரம் வழலைக்கொக்குந், தேறான பூவினுட குருவைக்கொண்டு செயநீரே செய்துகொண்டு உப்பைக்கட்டி, வீறான உப்பாலே சூடன்கட்டி வேதைகண்டமார்க்கமடா விளங்கிப்பாரு, நீறான அறைமுகமோ கோடாகோடி நிலைத்துநின்ற கட்டினமோ கோடியாமே. 164

ஆமப்பா வித்தாதி குருவினாலே அடங்காத தொழிலப்பா அமைக்கப் போகா, தாமப்பா சட்டைமுனி ரெண்டோண்டஞ் சாற்றியதோ ராயிரத்திற் குருபூநீறு, வேமப்பா விக்குருவைக் கொண்டுதானும் வேருமட்டுந் தூருமட்டும் வினவினாற்கொள், தாமப்பா சரக்கெல்லாம் வேதையோடுஞ் சட்டைமுனி ஆயிரத்தின் சார்புகாணே. 165

காணப்பா கைமுறைக்குச் சட்டநாதர் கருத்துறவே சாஸ்திரத்திற் காட்டினார்கேள், பூணப்பா ஒருதுறையோ கோடாகோடி பொன்னோடு வெள்ளிவித்தை ரெண்டுமேநேரே, தோணப்பா தோணுமட்டுந் துறையோ கோடி சூட்டினா ரதுகண்டு தோணிப்பாரு ஊணப்பா வதிலிருந் தூன்றி வாத முற்றுப்பார் தவறாது ஒன்றுந்தானே. 166

ஒன்றான வயித்தியத்தின் குருவுஞ்சொன்னேன் ஒகோகோ வாதத்தின் குருவுஞ்சொன்னேன், ஒன்றான முதண்ட லேகியத்தை உணர்வாகச் சொல்லிவிட்டேன் தீட்சைக்குள்ளே, ஒன்றான பூசைவிதி செய்யுங்கால முறவாடு மறைககழுஞ்சி உள்ளேகொள்ள, ஒன்றான நினைவாலே ஒளியைக் காணு முற்றுப்பா ராறுமங்கே ஓடியேறே. 167

எறடா குளிகையிட்டுக் கற்பங்கொண்டு யிருக்கையிலே உட்பசந்து பெருத்துநெரந்து, தேறடா தேகமெல்லாம் வெளுப்புக்கண்டு சிந்தையிலே துயரமதாய்த் தசைநீர்விம்மி, மாறடா தசைவீங்கி மயக்கமானால் மறுபடிதான் குட்டநீற மாறிப்போக, வீறடா சொல்லுகிறேன் சாதிலிங்கம் விளங் கவே பலமொன்று வாங்குவாங்கே. 168

வாங்கிவா யரைப்பொடிதான் பலந்தானென்று வளமான வீரம் பூக் காரசாரந், தாங்கிவாய் வகையொன்று பலங்கால்வீதஞ் சாதிலிங்கத் திடைபோடு தாரஞ்சிங்கி ஓங்கிவாய் வகையொன்று சூதங்கூட்டி, உத்தமனே பழச்சாறு லரைப்பாயப்பா பாங்குடனே யிருசாமமரைத்தபின்பு பதைப்படங்கக் குகைக்குள்ளே பதித்துவையே. 169

வையப்பா மேல்மூடிச் சீலைசெய்து வரிசையா மைந்தெருவிற் புடத் தைப்போடு, செய்யப்பா வாறினபின் னெடுத்துக்கொண்டு திரும்பவுந்தான் குகைக்குள்ளே சேரவைத்து, கையப்பா கருவளையல் வீரங்காரங் கை முறையாற் சாரம்பூ நீறுகூட்டி, தொய்யப்பா அயக்களங்கந் தனக்குநேராய்ச் சூட்டியே உருக்கையிலே சுத்தமாமே. 170

சுத்தித்த லோகமடா வங்கமாச்சு தொடுகுறிபோற் சூதத்தைச் சரியாய்ச்சேரு, மத்திக்க உருகுமடா சூதந்தானு மடங்காத சூதத்தை மடக்கிக் கொல்லும், பத்திதரும் வீரமதிற் சரியாய்ச்சேரு பாங்கான காலைரச மாகும்பாரு, அத்திக்கு மூலைப்பாலா லாட்டிஆட்டு அம்மம்மா செந்தூர மாகும்பாரே. 171

ஆகுமடா கெந்தியது ரெட்டிப்பிட்டு அப்பனே பொற்றலையின் சாற்று லாட்டிச், சாகுமடா மூன்றுநா ளரைத்தபின்பு சாத்தடா சிவக்குமட்டும் புடத்தைப்போடு, பாருபெறும் குக்குடமாம் புடத்துக்கேதான் பறக்குமப்பா பதினெட்டுக் குட்டமெல்லா, மேகுமடா கிரந்தியது சூலைமேகம் என் சொல்வேன் குன்றிபிடை யிதமாய்க்கொள் 172

### துளசிலேகியம்.

கொள்ளவே சொல்லுகிறேன் துளசிதன்னைக் கூறுசக் காறுபழம் ஒன்று வாங்கி, அள்ளவே பனைவெல்லம் பலந்தானறு அதிவிட்டைப் பாருமெறக் காய்ச்சுக்காய்ச்சு, தள்ளவே திரிகடுகு மதூரம்ஓமம் சுக்காளை காருகோவஞ்சி, கெந்தி, வள்ளவே பறங்கியுட பட்டையோடு வாய்விளங்கம் கோட்டமோடு வகைதானொன்றே. 173

வகையொன்று பலவீதமாகவாங்கி வாகாகச் சூரணித்துப் பாகிற்கிண்டித், தகையாதே நறுநெய்தான் படிகால்விட்டுச் சாரமுள்ள தேன்நெய்க்குப் பாதிகூட்டித், துகையாக மெழுகுபதந் தன்னிலேதான் தோன்றவே வழித்துவைப்பாய் பீங்கானுள்ளே, பகையான நோய்களென்றும் பதினெண்குட்டம் பறக்குமடா லேகியங்கண் பார்க்குமுன்னே. 174

கண்பார்த்துக் கைபார்த்து முகந்தைப்பார்த்துக் கண்டிதமாய்ப் பண்டிதத்தைக் கருவாய்ப்போடு, விண்பார்த்து மேனும்பாய்த் திரிந்தாலொன்று மெய்ப்படா தப்பாகேள் விருதுகட்டு, பண்பார்த்து படித்ததனால் வருவதேது பாசாங்காய்த் திரிந்தாக்கால் வயித்தியமாமோ, பெண்பார்த்து மோகமுற்ற பித்தர்போலே பிலக்கவே வயித்தியத்தைப் பேணிப்பாரே. 175

பாரப்பா உளுந்து மேல்தோடு போக்கி பானையிலே யூறவைத்துப் பதமேயாகிற், சீரப்பா பருக்கையதா யாட்டிக்கொண்டு சிறுகவே காக்கையுட விலையுந்நன்றாய், கூரப்பா அரைத்தபின்பு ரெண்டும்நேராய்க் கூட்டியே ரேசித்து நறுநெய்க்குள்ளே, சேரப்பா வெந்தெடுத்த அடையைத்தின்று தின்றபின்பு நெய்யதனைக் குடித்திடாயே. 176

குடித்திடுநீ யப்படியே அஞ்சுநாள்தான் கூறக்கேள் ஏழாநாளொன்றுக் குளுந் துசேரு, திடத்துடனே படியரைக்கால் மூலிநேராய்த் தின்றிடவே சொன்னேன்கேள் சிறக்கைப்பாரு, வெடிப்பிளந்த காலுக்குச் சிப்பிச்சுண்ணம் விளக்கெண்ணெய் நெய்யுடனே கெல்லிக்காயும், அடிக்குழியி லரைத்துநீ பூசிப்பாரு அப்பனே மண்டலத்திற் கமலமாமே. 177

### நாகசெந்தூரம்.

ஆமடா நாகசெந் தூரங்கேளு அப்பனே தங்கமது பலந்தானொன்று, தாமடா குகைதனிலே யுருகும்போது தாக்கடா மஞ்சிறுபிலைதான் பலமதொன்று, வேமடா வெண்கொருஞ்சி வேராற்கொண்டு மீறவேதிப்போம் மூலிவேகம், நாமடா கல்வத்திற் கொட்டிக்கொண்டு சமஞ்சிலே பலமொன்று வாருவாரே. 178

வாரப்பா கல்வத்திற் கூட்டியாட்டி மாய்ந்தபின்பு வீரமது பலந்தானொன்று, சேரப்பா முலைப்பாலா லாட்டுஆட்டு திறமாகமூன்றுநாள் பனியிற்போடு, நேரப்பா செந்தகந்தான் ரெட்டிப்பிட்டு நேர்மையாய் பொற்றலையின் சாற்றாலாட்டி, பேரப்பா வில்லைசெய்து காய்ந்தபின்பு பேதமில்லாக் குக்கிடமாம் புடந்தாறுதே. 179

ஆமான படத்துக்குப் பொற்றிலையின் சாற்றால் அரைத்தரைத்துப் புடம்
போட்டு வெளுக்குமேயப்பா, பேமான நாகத்தின் செந்தூரத்தின் பெருமைசொல்ல
வென்றால் முடியாதப்பா, காமான கற்பமது கொண்டால்போது வயிற்றி
லே பெரிசுக்கட்டி இழுப்புகட்டி, தேமான காயத்தின் உலர்ந்துவற்றித் தேரை
போ லேயிளைத்தால் செய்யக்கேளே. 180

செய்யவே யென்றாக்கால் சொல்லக்கேளு திறமான நாகத்தின் செந்தூ
ரத்தை, மெய்பாகச் சொல்லுகிறேன் பணவெல்லத்தில் மெத்தவேகொள்
ளாதே குன்றிகொள்ளு, வையோகஞ் செய்யாதே புளியாகாது தாம்பூலமா
காது சடத்திறேர்க்கு, பொய்யல்ல மூலத்திலெடுத்தேருகம் போகுமடா
புல்த்தியனே கஞ்சாவாங்கே. 181

காஞ்சாவுமேலமொடு சாதிக்காயுங் கடுக்காயுஞ்சுக்குடனே வாய்விளங்க
மிஞ்சாமலொடிவடக்கிச் சூரணந்தான் மிளகோடு திப்பிலியும் கருக்குமூலம்,
மஞ்சளொடு பத்திரியுங் கிராம்புஞ்சமம் வரிசையாய்க்குறோசாணி சிற்றரத்தைமூ
லம், தஞ்சமுற வகைக்கொன்றுபலந்தானென்று சாதகமாய் வறுத்துச் சூர
ணித்துவையே, 182

சூரணந்தான் கண்டதுக்குப் பாதியென்று சமமாக சீனியது என்விற்பாதி
கூரல்லோ மருந்தெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து கூர்மையாஞ் சீனியென்றுந்
துவைத்துக்கொண்டு, வேறேமருந்துகொள்ள வேணுமோசொல் மீறுகி
ன்ற விம்மருந்து கழஞ்சிகொள்ளே நீறான நாகத்தின் செந்தூரத்தை, நிலைக்
கஒரு மண்டலந்தான் குன்றிஉண்ணே. 183

உண்ணவே மூலமெல்லாம் பாணறுமேலே யுதானமென்ற வாய்வாலே கு
ளிர்ந்துபோச்சு. கண்ணவே தனவாய்வு மெய்க்கேபோச்சு கழிச்சல்போ யிரத்
தமெல்லா மெய்க்கேபோச்சு, அண்ணவே கிரகணியெல்லா மகன்றுபோச்சு
வைப்பனை பதினெட்டுக் குட்டம்போச்சு, எண்ணவே அனுப்பான மதித்து
கொண்டால் எளிதல்ல பாம்பினுட விடந்தான்காணே. 184

விடமேறிக் கொண்டதுபோல் மெய்யிலுள்ள வியாதியெல்லாம் பாம்பு
தனைக் கண்டாலோடும். திடமாக நாகத்தின் செந்தூரத்தைச் செப்பினார்கை
முறையாற் சேரச்சொன்னேன். வடாது கருவங்கங் கட்டிக்கொண்டு
வைப்பசெந்தூரமாத் திரைதான்செய்வாய், படரான வங்கமது சேர்ந்து
தானுல் பரியைமுற்றிக் கொள்ளுமடா பாருபாரே. 185

வங்கச்செந்தூரம்.

கொல்லுமே தங்கத்தைக் கொல்லுங்கொல்லும் கொடிதான சூதமது
பலந்தானென்று, செல்லுமே செந்திசைக் கெனக்குப்பாதி சேரப்பாவெட்டி
லொன்று காரங்கூட்டி, வல்லதொரு மீனுதக்கா லிச்சாறூட்டி வாகாக
விருசாம மரைத்துக்கொண்டு, அல்லவேபூநீறு கழஞ்சுகூட்டி ஆகாகா வங்
கமது பலந்தான்ரெண்டே. 186

சேண்டான வங்கமது உருகும்போது நிறமாகப் பணம்போலே வில்லைத
ட்டி. திண்டுவிட வேகொடுக்க விழுக்கும்பாரு சிறப்பாக மருந்தெல்லாந்
தின்றுங்வங்கம், கண்டதுண்டோ கண்ணுள்ளே யிந்தக்கட்டுக் களக்கமடா
வங்கமது உருக்கிப்பாரு, திண்டாடுங் கண்ணிட்டுக் கருகியுள்ளே சீரணித்து
ப்போகாது கவுரிகூட்டே. 187

கூட்டப்பா குகத்திற் பாதிசேர்த்து கொட்டப்பா கருவங்கங் கட்டிப்
போச்சு, மூட்டப்பா கண்டிடைக்குத் தாளகத்தை முஸ்திப்பாய் சுத்தி
செய் தெடுத்துக்கொண்டு, காட்டப்பா வங்கமது உருகும்போது கட்டிடு
மால் தேவிதனைப் பொடித்துப்போடு, பூட்டப்பா நாயுருவிக் காம்பால்
கிண்டி புகழான கருவங்கம் பொலிந்துநீறே. 188

பொலிந்தவங்கங் கலவத்திற் பொடித்துத்தூளாய் பூநாக மெட்டி
லொன்று வுலர்த்திப்போடு, மெலிந்துவிடு வங்கத்திற் பாதிகுகம் வீரமதில்
வங்கத்திற் சமனுய்ச்சேரு,. மலிந்துசப்பா வாலைரச முலைப்பாலாட்டி வா
காக வாட்டியே பனியிற்போடு, நலிந்துவிடும் பின்பதிலே கெந்திதன்னை
ரெட்டிப்புச் சேர்த்துநீ நாட்டிடாயே. 189

காட்டினுல் பொற்றலையின் சாற்றுலாட்டி நாலாநாள் வில்லைசெய்து
ரவியிற்போடு, ஓட்டிலே வைத்திதனை யோடுமூடி யுறவாகச் சீலைசெய்து
காயவைத்து, தாட்டிகமா யஞ்செருவிற் புடத்தைப்போடு சாதகமா யஞ்
சுதரஞ்சாற்றுலாட்டி, மூட்டியே கைமுறையாய்ப் புடத்தைப்போடு மூதண்
ட வங்கமது முருக்கம்பூவே. 190

முருக்கம்பூ நிறமென்ன ஒப்போஅல்ல முக்கியமாம் செந்தூரம் பனை
வெல்லத்தில், திருக்கறவே குன்றிகொள்ளு மண்டலந்தான் திரிகடுகு
மதுரமொடு சீரகமுங்கூட்டி, யுருக்கமுடன். பாத்திரத்தில் வைத்துக்
கொண்டால், ஓடுமடா மேகமெல்லா மொழிந்துபோகும் பெருக்கமுடன்
வாயுவெல்லா மெங்கே போச்சு பித்தமொடு குட்டமெல்லா மொழிந்து
போச்சே. 191

போச்சடா கிரந்தியொடு சூலைதாகம் புணர்ச்சியொடு விந்துவிலே
சென்றவாய்வு, போச்சுதடா வுதரத்தி லுள்ளவாய்வு பொருமலுடன் மே
லேப்பம் புழுக்கல்மூலம், போச்சுதடா குசிகா வாய்வுகுன்மம் பூரணத்தைக்
கொல்லவந்த க்ஷயரோகங்கள், போச்சடா பீனிசங்கள் பாலரோகம் புத்
திகெட்ட சித்தர்களே புகலக்கேளே. 192

புகலக்கேள் வங்கமது தங்கமப்பா பொய்யல்ல கூட்டியதோர் கருவங்
கத்தால், அகிலமெல்லாம் படைத்தளித்த பரத்தின்கூறு வாகத்திற் குறுதி
மெத்த வதனாற்சொன்னேன் பகிரண்டம் பேதிக்குந் தங்கம்நீறும் பண்ணுவது
வங்கத்தாற் பரிந்துகாணுஞ், செகமெல்லாங் கொள்ளாது தங்கபற்பம்
செப்பினேன் புலத்தியனே சேர்ந்துகாணே. 193

வெள்வங்கச்செந்தூரம்.

காணப்பா தங்கமது பலந்தானென்று கடியதொரு குகைதனிலே உருக்கும்போது, தோணப்பா சூதமொடு தானஞ்சிங்கி சுத்தித்த வெள்ளீயம் சாதிலிங்கம், பேணப்பா வரிதாரம் கிழிளைவீரம் பேரான வெண்கார மெட்டுங்கூட்டி, பூணப்பா வகையொன்று பலமுங் கால்தான் புகழான பழச்சாற்று லரைத்துக்கட்டே, 194

அரைத்திடுவாய் சாமமொன்று அப்பாகேளு ஆகாக பூநீறு சாரங்கூட்டி, வரைக்கடங்கா நீருகும் நீவிரைந்து யாட்டுவா யிருசாம மரைத்துக்கொண்டு, நிரைக்கவே குன்றியிடை வில்லைகாய்ந்தால் நேராக ஒவ்வொன்றாய்க் கொடுக்கவாங்கும், தரைக்கடங்காப் பொன்னைமருந் தெல்லாமுண்டால் சாதகமாய்த் தங்கத்தின் களங்கம்போச்சே. 195

களங்கம்போ யிருக்கின்ற தங்கந்தன்னைக் கருவளையல் வீரமொடு காரசாரம், வழங்கவே பழச்சாற்று லாட்டிக்கூட்டி வாகாகச் சோதித்துப் பின்பு கேளு, விளங்கொண்ட வீயமடா தங்கந்தானும் வேதையிதிற் சொல்வதற்கு நாவெழாது, உளம்பெறவே சூதத்தைச்சரியாயூட்டி உத்தமனே வீரத்தை ஒன்றுத்தாக்கே. 196

தாக்கடா ரெண்டுபல மூலைப்பாலாட்டுச் சாதகமாய் பழச்சாறு கூடவாட்டு, வாக்கடா யிருசாம மரைத்தபின்பு வரிசையாய்க் கைமுறையாய்ப் பனியிற்போடு, போக்கடா கெந்தகமிரட்டிப்பிட்டு பூட்டடா தாளகந்தானுக்கொன்று, யாக்கடா பத்திலொன்று சிலையுமிட்டு ; அப்பனே பொற்றலையின் சாற்றுலாட்டே. 197

ஆட்டுவா யிருசாமம் வில்லைசெய்து வாதித்தன் கண்டபின்பு குப்பிக்கேற்றி, மூட்டுவாய் மூன்றுநாள் முத்தியிட்டு முழங்கவே வயிரவர்க்குப் பூசைபண்ணி, நீட்டுவா யருணனிறஞ் செந்தூரத்தைச் சிறப்பான பூரண சந்திரோதயந்தான், நாட்டுவாய் சந்திரோ தயத்தைக்கண்டால் நடுங்குமடா நோய்களெல்லாங் கண்காணாதே. 198

கண்காணு நோயோடு காலன்பாவி கடைகெட்டவாங்காரமுள்ளேபுக்கி, விண்காணு விந்துவங்கே மேலேயேறும் விருதாக மனதுதன்னை யொன்றாய்ப்பண்ணு, முண்காணு வமுதந்தா னுள்ளேபாயு மொன்றல்லக் கற்பத்தை யுறுதிபண்ணும், பெண்காணுச் சையோகம் பிலத்துதென்றுற் பேசாமற் சொல்லுமடா பிறநீர்க்கோவே. 199

பிறநீரோ வாம்பலொடு மகோதரந்தான் பெருவயிறு நீர்ச்சோகம் பித்தரோகம், திரமான வாதத்தி லெழுந்தரோகஞ் சிலேஷ்பனத்தா லெழுந்ததொரு தோஷந்தோஷம் வரமான பதினெட்டுச சன்னிமூலம் வகாகா குன்மமொடு பீலிகையுந்தானு, முறவான கிரந்தியொடு மேகசூலை யோனிப்புற்றுட்சிலைகளொன்றில்லாதே. 200

ஒன்றல்ல சதையிலுள்ள தோஷம்போகும் முத்தமலே நரம்பிலுந் தோஷம்போகு, மொன்றல்ல வபானனின்ற வாயுவாலே ஒருகோடி நோயுண்டா மொப்பார்சொல்ல, ஒன்றல்ல உந்தியின்கீ ழபானனின்று னூடலையெல்லாங் கெடுப்பதற்கு வுள்ளங்கொண்டா, னொன்றல்ல சினமபோக்கிச் சிவமாய்ச்செய்தால் ஒழுடிந்து போமலந் தபானன்றானே. 201

தானென்ற நோயெல்லா மபானனாலே சாற்றுவது பிராணனென்ற வாயுவாலே, வாரின்ற திசைபத்தும் உதானனாலே வந்ததடா வெழுவாய்வு மிதிலேபுக்கி, வேனென்றநோயெல்லாம் படைத்ததப்பா மெய்விழுந்து போமட்டும் விரோதஞ்செய்யும், ஏனென்ற பூரணசந்தி ரோதயத்தை யெள்ளளவு முட்கொள்ள விடைந்துபோச்சே. 202

சுயமாக்கினிகுமாரம்.

போச்சடா சீனியிலே நெய்தான்கூட்டிப் புகழான திரிகடுகு சீரகமுங்கூட்டிப், போச்சென்ற நோய்களெல்லாஞ் சேரத்தானே புக்குமடா கானமெங்கே கடல்களெங்கே, போச்சடாகற்பத்தால் வந்ததோஷம் போகுதடா பூரணத்தைத் தின்றதாலே, போச்சப்பா கற்பங்க ளெல்லாம்பாரு பூண்டதொரு சுயமக்கினி குமாரன்போக்கே. 203

குமாரனென்ன வேசுறுக்குக் கொள்கினேன்கேள் குற்றமெல்லாந் தீர்த்திருந்த வயத்தினியஞ், சமானமதாய்க் காந்தத்தினியந்தானுஞ் சரியாகவதையொன்று பலந்தானென்று, அமராடு தாளகந்தான் பலத்திற்பாதி யப்பனே கெந்தகமும் பலந்தான்ரெண்டு, எமராய சூதமறைப் பலமுங்கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றாற் சாமமாட்டே. 204

ஆட்டுவாய்க் கற்றாழஞ் சாறுசாமம் அப்பனே ரசிதகிண்ணத்தில்வைத்து மூட்டுவாய் ரவிமுகத்தில் திங்களொன்று முடிந்தகுருக் கழஞ்சியதில் வீரம்போட்டு, மாட்டுவாய் யென்சொல்வே னரைக்கும்போதில் மகத்தான ரவிமுகத்தி லெல்லாம்நீறும், சூட்டுவாய் கெற்பநோய் சூலமேகந் தொகுறிபோற் குன்மத்தைத் தூரத்தும்பாரே. 205

தூரத்துமடா அக்கினி குமாரனபரஞ்சு சொல்லின்வாய் நாற்றமுன் பேசுழற்றிவெட்டி, மரத்தினிமேல யிரும்புபட வைத்தாப்போலே யறுத்துவிடு மகாபாச புத்திரன்தான், சிரத்தினிலே வாய்வேது செலந்தானேது தேகந்தில் தசைகளூட வலிதானேது, சுரத்தினிலே மீறுமுறை சுரங்களேது துடிக்குமொரு விழிநோய்கள் தொண்ணூற்றாறே. 206

ஆறுவகைச் சிறுணியெல்லா மகன்றுபோகு மப்பனே மகோதரத்தையறுத்துவாங்கும், கூறுகின்றகுறைநோயு குஷ்டமெல்லாங் குடிப்போகுமென்றுசொல்லிக் குமாரனோடே. வேறுமொழி பேசாமல் விலாங்கன்கோடும் வெட்டவெளி நோய்களெல்லாம் விழலாய்ப்போகும், தேறுமிந்தக் குமாரவர்க்க மார்க்குமில்லை செப்பினே னிதுவறிந்து தெளிந்திடாயே. 207

### ஆனந்தவயிரவன்.

தெளிந்திடவே யானந்த வயிரவன்தான் செப்பரிது செப்புகிறேன் புலத்தியனே அய்யா, களிந்ததொரு பசுத்தழையின் பாலில்சொல்லிக் கவுரிலிங்கஞ் சிலைதாரம் காரநாபி, வழிந்தகெந்தி வீரமொடு சிங்கிதோட்டி வகையொன்று பலமொன்று மண்டலந்தான், குளிர்ந்தகுழிப் பெண்ணமுரி கற்றாழம்பால் கொட்டியரை யெண்சாமம் ரவியிற்போடே. 208

போடப்பா வில்லைசெய்து காய்ந்தபின்பு புடமொன்று பத்தெருவில் மணற்குள்போடு, நீடப்பா நீறியது இடைபோகாது நேருகின்ற துத்தமொரு பலத்தைக்கூட்டு, சூடப்பா சூடமொரு பலந்தானென்று சூட்டியபின் குருக்கழஞ்சி தூக்கிப்போடு, ஆடப்பா விதினுட்டு மகாரசன்னி யானந்த வயிரவனும் பொன்னூமத்தே. 209

மத்தினுட சாற்றாலே சாமமொன்று வாகாக மிளகுபோற் உண்டைசெய்து, பெற்றதொரு சாம்பிராணிப் புகையிற்காட்டிப் பெருமையொத்த வெள்ளியுட சிமிழ்க்குள்வைப்பாய், சத்தியுட சாபத்தை நிவர்த்திசெய்து சாதகமாய் வயிரவனைப் பூசைபண்ணி, முத்திபெருங் குளிகையெல்லாம் முன்பின்பாராய் முனையென்ற சன்னியெல்லா முறிந்துபோமே. 210

முறிந்துபோம் குன்மமொடு குட்டம்மூலம் மூலத்திற் கிராணியொடு வனந்தவாய்வும், முறிந்துவிடு மானந்த வயிரவனைக்கண்டால் மோசமடா வென்றுசொல்லி நோய்களெல்லாம், முறிந்துபோம் செந்தூர விதங்கட்கெல்லாம் முப்பூவின் குருவினுட மூர்க்கமப்பா, முறிந்துபோம் ரசகற்பம் கண்டாலப்பா மோகமாய்ச் சூதபற்பஞ் சொல்கிறேனே. 211

### சூதபற்பம்.

சொல்லுகிறேன் வெண்முள்ளிப் பழத்தின்சாறு தோன்றுகண்டங் கத்திரியின் பழத்தின்சாறு, வெல்லுகிறேன் நீர்முள்ளி காவெள்ளுள்ளி விளங்கவே குறட்டையுட பழத்தின்சாறு மல்லுகிறேன் படியொன்று வகையொன்றப்பா வஞ்சுபத்துப் பலங்கெந்திக் கல்வத்தாட்டு, கொல்லுகிறேனென்று சொல்லுங் கெந்திலையத்தான் குருவிதிலே கழஞ்சியஞ்சு கூட்டியாட்டே. 212

ஆட்டவே சாறெல்லாம் வற்றவற்ற ஆச்சரியங் காசுபோல் வில்லைசெய்து, மூட்டுவாய் ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு முறையோடே கைமுறையாய்த் தயிலம்வாங்கு, நாட்டுவாய் சூதமொரு பலந்தாலீயம் நலமாகக் கல்வத்தில் வாருவாரு,. கூட்டுவாய் கெந்தியுட தயிலமப்பா குறையாமற் பலமொன்று கூடவாரே. 213

வாரப்பா குட்டிக்கக் காளிச்சாறு வகையாகப் படியொன்று மாளமாளச் சேரப்பா தயிலமொடு சூதந்தானுஞ் சேர்ந்தரைக்க மூன்றுநாள் மாண்டுபோகும், கூரப்பா குகையிலிட்டுச் சில்லுச்செய்து குக்குடத்தில் நீறியது கொடுஞ்சூதந்தான். பேரப்பா யிதுக்குப்பேர் ரசகற்பூரம் பெரிதான கிரந்தியெல்லாம் பிறிந்துபோமே. 214

போமடா வாயுவென்ற தெல்லாங்கேளு புற்றரையாப் போடுகடி தடத்தின்புற்று, ஆமடா லிங்கபுற்றுச் சூலேமேகம் அளவற்ற நோய்களெல்லா மகலுமப்பா, ஊமடா புடஞ்சயமாய் ரசகற்பூரம் நாட்டிஞே மிதுவன்றிப் பதங்கஞ்செய்வார், தாமடா கொண்டாக்கால் வாயைக்கட்டுந் தந்தம்போம் பொறுத்தெல்லாஞ் சாருங்காணே. 215

வயிரபற்பம்:

காணப்பா கட்டுபல மிணங்கன்தேனில் கைகொண்டு மத்தித்து வயிரத்தூக்குத், தோணப்பா கவசமிட்டுப் புடத்தில்நீறுஞ் சுகமாக உட்பூசு குருவையப்பா, வீணப்பா வல்லவிது வயிரபற்பம் மீறவே சமனுக்ச் சூதங்கூட்டி, பூணப்பா சூதத்திற் பாதிவீரம் புழுக்கஈ்த மிடைப்பாகம் வண்டுகூட்டே. 216

வண்டரிசி சூதத்திற் பாதிகூட்டி வளமான விந்துவினல் மாட்டியாட்டு, ரெண்டுநா ளரைத்தபின்பு வில்லைதட்டி நேராக உலர்ந்தபின்பு புடத்திற் போடு, கண்டவரார் வயிரத்தைப் பற்பமாகக் கடினமடா வயிரமது பற்பஞ் செய்ய, பண்டையிலே யிதனுலே பரியைநீற்றிப் பரிசனத்தில் வீரமிட்டு வேதைபாரே. 217

வேதையாந் தங்கபற்பந் தேனிற்குன்றி வீதமடா மண்டலங்கொள் க்ஷயமெல்லாம்போம், பாதையாம் வச்சிரத்தால் தங்கம்நீற்றிப் பாசமாய்க் கொண்டுவந்த மார்க்கமப்பா, பேதையாந் தேகமெல்லாம் பொன்போலாகும் பிள்ளைகட்குச் செய்திட்டால் பெலத்தகாயந், தாதையே யவமிருத்துத் தட்டிப்போகுஞ் சகலசித்துங் கைவசமாஞ் சார்ந்துபாரே. 218

பாரப்பா வயிரபற்பம் பனைவெல்லத்திற் பாங்காக விருநேர மண்டலந் தான், சாரப்பா தேகமது வயிரம்போலாந் தசைமேலே வெடித்தபுண்கள் பிளவையோடு, தீரப்பா பவுந்திரமுதற் கண்டமாலை தீராத கடிவிஷங்கள் குஷ்டரோகம், பேரப்பா வயிரமென்று கேட்குமுன்பே பிறிந்துபாராமலே பிறிந்துபோமே. 219

பிறிந்துபோங் கற்பத்தால் வந்ததோஷம் பிழைபொறுக்கு மோவயிரங் கண்ணுற்பார்த்தால், முறிந்துபோம் மலக்கட்டு கட்டிற்ருனல் மோசமடா மலக்கட்டுத் தீரச்சொல்வேன், செறிந்ததிரி கடுகுரோ கணியிந்துப்பு திரிபலைமுத் தக்காசு விடையமோமம், அறிந்துவாய் விளங்கமொடு சுறுக்கு மூலம் அப்பனே வகையொன்று பலந்தானென்றே. 220

ஒன்றப்பா சீலவாகைச் சூரணந்தான் உத்தமனே யரைப்படிதா னுணர்ந்துசெய்து, நன்றப்பா மருந்துடனே யெல்லாந்தூளாய் நாட்டினுற் கண்டிடைக்குச் சிவதைகூட்டிச், சென்றப்பா யோரண்டத் தயிலத்தோடே திரமாக லேகியம்போற் செய்துகொண்டு, வென்றப்பா வெருகடிதான் சீனிவாயில் விழுங்குவா யினிப்போடே விழுங்குவாயே. 221

விழுங்குவாய் லேகியந்தான் கழஞ்சிரெண்டு மீறுகின்ற சீதமெல்லா மறுத்துண்டேபோம், ஒழுங்கான வேப்பீர்க்குக் கிஷாயத்திற்கொள் உத்த மனே கிருமிபெல்லா மொழிந்துபோகும், கழுங்காத குடல்வாயு மாண்டு போகும் நலமான அபானவாய்க் கடுப்புத்தோன்று; எழுங்காமல் சுத்தியுண் டாம் நீர்த்தோஷம்போம் இதைப்போலே சுகபேதி யில்லைகாணே. 222

காணப்பா கெந்தகமும் லிங்கம்வீரங் கட்டாகக் குருவோடு காரசாரம், பூணப்பா சிலைநாகங் கருநாகவங்கம் புகழான வெள்ளியொடு சூதந்தாரம், தோணப்பா தாரசிங்கி யயத்திறுேடு துசிசெபொன் னியிளியொடு துத்தஞ் சூடன், வேணப்பா வகையொன்று பலந்தானென்று வெண்கருவி லெருக் கம்பால் நீர்விட்டாட்டே. 223

ஆட்டுவாய் முச்சாம மப்பாகேளு அய்யனே முலைப்பால்நீர் சாம மொன்று, நாட்டுவாய் பழச்சாறு சாமம்நாலு நல்லதொரு பொற்றலையின் சாற்றினுலே, மூட்டுவா யிருசாம மரைத்தபின்பு மூனையான வில்லைசெய்து ரவியிற்போடு, நீட்டுவா யுலர்த்தபின்பு குகையில்வைத்து நிசமாக மேல் மூடிப் புடத்தைச்செய்யே. 224

செய்படா புலத்தியனே யீசானத்திற் செப்பமாய் வயிரவர்க்குப் பூசை பண்ணு, செய்யடா மணல்மறைவில் முப்பதெருவாலே திடமாகப் புடம் போடு மயில்கழுத்தாம்வண்ணஞ்; செய்யடா சமனுக் கெந்திகூட்டித் நீர்க் கமுடன் பொற்றலையின் சாற்றாலாட்டிச் செய்யடா குக்குடமாய் முன்போற் போட்டுத் திடமாகுஞ் செய்செந்தூ ரந்தான்காணே. 225

செந்தூர மாகுமடா பொற்றலையின்சாற்றால் திரும்பியொரு போத ரைத்துப் புடத்தைப்போடு, செந்தூரங் கருஞ்சிவப்பா மப்பாகேளு தே னுேடு செந்தூரங் குன்றிகொள்ளு, செந்தூர மமிர்தசக் கரையிற்கொண் டால் தேகத்தில் வெட்டைசுரஞ் சேரப்போகும், செந்தூர மண்டலமே தின்றாயானல் சிரதோஷஞ் சலதோஷங் கபாலவாய்வே. 226

வாயுவினல் வந்ததொரு மேகசூலை வலிகுன்மங் கரமாலை சோகை பாண்டு, நேயமுட னுந்திக்குள் சுரமும்போகும் நெஞ்சுவலி தண்டெரிவு பிறநீர்க்கண்டி, ஆயுமே நாதவிந்து விழுங்கும்வாய்வு அப்பனே புழுவெட்டு விழியில்ரோகம், சாயுமே நோய்களெல்லா மிருப்பிடங்களற்றுத் தவறுண்டு போகுமடா சகலநோவே. 227

சகலமாம் நோயெல்லாந் தீர்ந்துபோகுஞ் சாற்றுகிறேன் புலத்தியனே தப்பாதய்யா, சுகமான கெந்தியது பலந்தானென்று சட்டதிலே யயப் பொடிதான் பலந்தானென்று, புகலாதே பழச்சாற்று லரைத்துச்சாமம் பூட்டியரை வெள்ளெருக்கம் பாலினலே, வகையாக விருசாமம் மாட்டி வில்லை வளமாக ரவிமுகத்தி லுலர்த்திடாயே. 228

உலர்ந்தபின்பு முப்பதெருப் புடத்தைப்போடு உத்தமனே யனுப்பானங் கண்டுகொள்ளு, அலர்ந்ததொரு நோயெல்லாம் பின்வாங்கிப்போம் அப்பனே காந்தமது பலந்தானென்று, பலன்பெறவே கெந்தியது பலந்தானென்று பாங்கான பழச்சாற்று லாறுசாமம், கலந்தாட்டு வெருக்கம்பால் ரெண்டுசாமங் கட்டுவில்லைத் தான்காய்ந்தால் புடத்தைப்போடே.

## மண்டூரச் செந்தூரம்.

போடுவாய் முப்பதெருக் குள்ளேநீதான் பொலிவான செந்தூர மனுப்பானத்தில், தேடுநீ கொள்ளப்பா ரோகந்தீருந் திறமான மண்டூரங் கேளுகேளு, வாடுவா யாயிரந்தான் வருஷஞ்சென்ற வுற்றதொரு மண்டூரம் பலந்தானென்று, கூடுவாய் கெந்தியது பலந்தானென்று கொட்டுவாய் சூதமொடு கெவுரிதானே. 230

தானென்ற சீனமொடு தாளகந்தானென்று சாரமொடு வெடியுப்புச் சாரங்கூட்டிக், கானென்ற வெருக்கம்பா லதனாலாட்டிக் கல்வத்தில் சாமமொன்று பழச்சாற்றாலே, வேனென்ற சாமம்ரெண் டாட்டிவில்லை விளங்கவே காய்ந்தபின்பு | புடத்திற்போடு, கோனென்ற குக்குடந்தான் சமயமுன்போல் குறிப்புடனே யரைத்தரைத்துப் புடத்திற்போடே. 231

புடந்தசந்தா னனபின்பு மண்டூரந்தான் பெலத்ததொரு செந்தூரமாகும் பாரு, திடம்படவே யனுப்பான மறிந்துசெய்தால் தேகத்திற் பாண்டுவெல்லாந் தீர்ந்துபோகும், நடம்புரிந்த லிங்கமனோ சிலையுங்கல்நார் ராசவர்த்தங் கெவுரியிரு தாரசிங்கி, விடம்புரிந்த வெள்ளையொடு தாளகந்தான் மீறவே வகையொன்று பலந்தானென்றே. 232

## நவலோக செந்தூரம்.

பலமான தெல்லாந்தான் சமனாய்ச்சூதம் பாங்கான வைங்கோல நெய்விட்டாட்டி, பிலமாக விருசாம மரைத்துக்கொண்டு பின்சாம விரவியக்கினி பதங்கமேற்றக், குலமான நவலோக மெல்லாஞ்சாகுங் கூறவே பதங்கமது பலந்தானென்று, நலமாக மூசையிலே யுருக்கும்போது நல்லவெள்ளிப் பலமொன்று உருக்கித்தீரே. 233

உருக்கியதோர் வெள்ளியது கல்வத்திட்டு உத்தமனே ரெண்டுபலம் வீரங்கூட்டி, பெருக்கவே முலைப்பாலா லாட்டியாட்டு பேசாமல் மூன்றுநாள் பனியிற்போடு, கருவான கெந்தகந்தான் பலம்நாலிட்டு கட்டான பொற்றலையின் சாற்றாலாட்டு, உருவான குப்பியிலே வாலுகேந்திரம் ஓகோகோ தூடியான செந்தூரந்தானே. 234

தானென்ற வெங்கலந்தா னிந்தவீதம் சாற்றடா செந்தூரந் தானேயாகும், கானென்ற நாகமொடு திராவகந்தான் கருநாகம் பித்தளைதாம் பிரத்தினோடு, ஏனென்ற வேமமொடு நவலோகந்தான் என்னசொல்வேன் முன்போல யிடைதப்பாமல். ஆனென்ற செந்தூரம் வெவ்வேறாகும் அளவற்ற நோய்களெல்லா மகன்று போமே. 235

போமப்பா நவலோக செந்தூரங்கண்டாற் பொறியான சன்மாந்திர நோய்களெல்லாம், ஆமப்பா மண்டூரம் போலேயல்ல வப்பனே நவலோக செந்தூரஞ்செய், ஏமப்ப கைமுறைகள் தப்பாமற்செய் எடுத்ததொரு செந்தூர மெல்லாமாகும், நாமப்பா நவரத்தின மிந்தவீதம் நாட்டினு லொன்பதுஞ்செந் தூரந்தானே. 236

ராஜபூபதி.

தானென்ற சர்வமகா வீரசூர சங்கார ராசபூ பதியைக்கேளு, ஏனென்று பூபதிப்பேர் கேட்குமுன்னே யெமதூதாள் காதவழிக் கப்பால்செல்வார், வானென்ற நவலோக செந்தூரந்தான் வகையான நவரத்தின செந்தூரந் தான், ஏனென்ற வகையொன்று பலமொன்றுக்கு இடைகன்தவ ருதபடி தூக்குதூக்கே. 237

தூக்கப்பா பலமொன்று சூதபற்பம் துரிசிசெந் தூரமது பலந்தானெ ன்று, வாக்கப்பா மண்டூரம் பலந்தானென்று வாகான காந்தமது பலந்தா னென்று, நோக்கப்பா கெந்திபற்பம் பலந்தானென்று நோவதனைத் தீர்க் கின்ற தாம்பிரந்தான், தாக்கப்பா திரிகடுகு பலமொன்றோமஞ் சாதிக்காய் வாய்விளங்கங் கிராம்புகூட்டே. 238

கூட்டுவாய் அதிவிடையம் நறுக்குமூலங் குங்குமப்பூ கஸ்தூரி வீரம்பூ ரம், நாட்டுவாய் கோரோசனை சிவதைகூடன் ராசவர்த்த மஞ்சனக்கல் பின் கடுக்காய், சூட்டுவாய் தாணிக்காய் [நெறி]விடம்பாஷாணந் துத்தமொடு கரு நாபி கெவுரிலிங்கம், மாட்டுவாய் வகையொன்று பலங்கால்வீதம் மைந்தனே மருந்தெல்லாங் கல்வஞ்சேரே. 239

சேரவே யொன்றாக்கி யரைக்கச் சொல்வேன் செம்முள்ளித் தோடை வலை கரியான்கொன்றை, ஆரையொடு வல்லாரை வெண்சொளுஞ்சி யா வாரை முருக்கம்பூச் செம்பரத்தம்பூ பாரமெனுங் கற்றாழம் பழத்தின்சாறு பாங்கான பொற்றலையின் பொன்னூமத்தை, வாரமுடன் வகையொன் றால் நாளொன்றாக வணங்கவே யரைத்திடுவாய் சாற்றினாலே. 240

சாற்றிலே யரைத்துசிறு பயறுமட்டாய்த் தவறாமல் உண்டை செய்து ரவியிற்போடு, கூற்றுவனூர் தேசம்விட்டு தேசம்போவார் கூறான பூபதிதான் காயக்கண்டு, தேற்றுவார் மானிடர்கள் தேசத்துள்ளோ ரேக மினிப் பிலத்துதென்பார் திடங்கொண்டேதான், மாற்றினால் வியாதி யெல்லாஞ் சித்தரப்பா மகத்தான பூபதியை வணங்கிச் செய்யே. 241

நாகபற்பம்.

வணங்கியே புலத்தியனே அய்யாகேளு வளமான நாகபற்ப மாகச் சொல்வேன், இணங்காத நாகமது பலந்தானென்று இந்திடைக்குச் சீலை யிட்டுக் கொளுஞ்சிவேரால், குணங்காமற் கிண்டிவரப் பற்பமாகுங் கூறக் கேள் பின்னெடுத்துக் கல்வத்திட்டு, மணம்பெறவே பழச்சாற்றால் நாலு சாமம் மடங்கவே யரைக்கையிலே மருந்துபோடே. 242

மருந்தென்ன வீரமொரு பலத்தைப்போடு வாகான லிங்கமொரு பலந் தான்போடு, பொருந்தவே சூதமரைப் பலந்தான்வாரு புகழாக வில்லை செய்து ரவியிற்போடு, திருந்தவே யஞ்செருவிற் புடத்தைப்போடு திர மான நாகமது செந்தூரந்தான், அருந்தவே குன்றியிடை பனைவெல்லத்தி லப்பனே குன்மமெல்லா மகன்றுபோமே. 243

## கெந்தகச் செந்தூரம்.

போமடா சீதரனர் கெந்திரெண்டும் புகழாக வகையொன்று பலந்தா னொன்று, ஆமடா பழச்சாற்றால் நாலுசாமம் அப்பனே மறுகல்வந் தன்னிற் சேரு, வேமடா வயப்பொடியுஞ் சூதஞ்சாரம் வெவ்வேறு பலமொன்று விளங்கவேதான், நாமடா நாலிலொன்று சாமயாட்டு நண்புகல்வத் திட்ட மருந் தொன்றாய்ச்சேரே. 244

ஒன்றாக்கிப் பொற்றலையின் சாற்றாலாட்டு உத்தமனே யறுசாம மரை த்தபின்பு, நன்றான பஞ்செருவிற் புடத்தைப்போடு ரசகெந்தி சாரமா விடைபோகாது, சென்றுடு செந்தூர மென்னசொல்வேன் சீராகக் குன்றி யிடை தேனிற்கொள்ளு, குன்றுத் குன்மமெட்டு பீலிகையினோடு கொழு த்தமகோ தரந்தீரும் கூறினேனே. 245

கூறினேன் சலாசந்துச் செந்தூரத்தைக் குன்றியிதில் தேனோடே கூட் டிக்கொள்ள, கூறினேன் நீராம்பல் சோகைதாகம் கொண்டசலக் கழிச்ச லொடு யினைரோகம், கூறினேன் நீர்க்கடுப்புக் கல்லடைப்பு கொத்தமல்லி சிரகத்திற் கொண்டாற்கேளு, கூறினேன் பித்தங்கள் நாற்பதுமேதீரும் கொள்பிறநீர்க் கோவைகுட்டம் பதினெட்டோடே. 246

பதினெட்டுக் குட்டமொடு குறைநோயெல்லாம் பறக்குமடா செந்தூர மூச்சப்பட்டாற், கெதிகெட்டோ மென்றோடும் வாதமெல்லாங் கெஞ்சவே தானடிக்கு நறுக்குமூலம், மதிகெட்டே னென்றுதே புலத்தியனே அய்யா வாய்விளங்கந் திரிகடுகு வோமங்காயம், அதிவிடையம் மெவாச்சாரம் பனை வெல்லாந்தா னப்பனே வகையொன்று பலந்தானென்றே. 247

பலமோடு சாரணைவேர் மருந்தோடெல்லாம் பரிவாகச் சூரணித்துப் பாங்குகேளு, கலங்கவே திருமேனி சிறுபுட்காலுங் கரியானும் வெவ் வேறே யுலர்த்தித்தூளாய், மலங்காமல் சூரணித்துப் படிகாலப்பா மருந் தோடே சேகரித்து நறுந்தேன்விட்டே, இலங்கவே யொருபோது கழஞ்சி யுண்ண வேகுமடா சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறே. 248

தொண்ணூற்று றுஞ்சடலத் தத்துவந்தான் சுத்தியாந் தோஷமெல் லாஞ் சொக்கியோடும், கண்ணுற்ற நாடியெல்லாம் பிளக்குஞ் சொன் னேன் கைகண்ட பூநீறு கருவாய்ச்செய்தால், எண்ணமாய்ச் செந்தூர மின த்துக்கெல்லா மிடுவதொரு பலத்துக்குக் கழஞ்சிவீதம், உண்ணவே செந்தூ ரம் பண்ணினாக்கால் உறுதியா மில்லாட்டா வுலகம்பொய்யே. 249

பொய்யென்று வுலகந்தான் வேதாந்தத்தைப் பூட்டாமற் சித்தாந்தம் புக்கிக்கெட்டார், பொய்யென்பான் கருவறியான் செந்தூரஞ்செய்யப் போக்கறியா னுலகத்தா னிடைபோச் சென்பான், பொய்யென்பா னவன் வாயில் மண்ணையள்ளிப் போடுநீ பாப்பாசி கொண்டுசென்று, பொய்யென் பா னவன்தன்னை முன்னேவைத்துப் பூட்டுவாய் செந்தூரம் பூணிச் செயயே. 250

சரக்குகள் சுத்தி.

செய்யப்பா கைமுறையாய்ச் செய்துகாட்டு செய்தொழிலைப் பாகமாய்ச் செய்யச்சொல்லு, வையப்பா சரக்கெல்லாஞ் சுத்திசெய்து மாட்டப்பா சுத்திக்கு வகையேகேளு, பொய்யப்பா சொல்லவில்லை மேனிச்சாறு புக மூகப் படியொன்று கற்றாழம்பால், மெய்யப்பா படியொன்று வமுரிதா னும் விளங்கவே படியொன்று பாண்டத்தூற்றே. 251

ஊற்றுவாய் பழச்சாறு படிதானொன்று உத்தமனே செம்பரத்தம் பூநீ ரூட்டு, ஊற்றுவா யொன்றாக்கித் தம்பலச்சா றொருபடிதான் கூடவிட்டு மூலைப்பால்கேளு, ஊற்றுவாய் படிகால்தான் ரேகித்தேபின் னுறப்போடு பாரையுப்பு இணங்கவேடு, தேற்றுவாய்க் காராம்பூச் சீனஞ்சாரந் திரமாக வகையொன்று பலந்தான் காலே. 252

காலாகப் பொடிசெய்து போட்டுக்கிண்டி காற்றூடா மூலையிலே கட் டாய்வைத்து, மேலான பாஷாணம் லோகத்தோடு வேண்டியதோர் சரக் கெல்லாங் கிழியாய்க்கட்டிச், சேலான ஆறல்விடும் பச்சஞ்சென்றால் திரும் பவே ஒருமாத்தைக் காடிக்குள்ளே, மாலாகப் போட்டேறு மூன்றுநாள்வை மகத்தான சுத்தியதாம் வயித்தியம்பாரே. 253

பாரப்பா விப்படியே சரக்குசுத்தி பாங்காகச் செய்தாக்கால் சரக்கெல் லாந்தான் காரப்பா வோடாது கடுந்தீயாலே கட்டாகச் சுத்திசெய்து செந் தூரஞ்செய், ஏரப்பா வைத்தியத்திற் சோம்பலாகா என்னைப்போற் சுத்தி வகை யாருஞ்சொல்லார், ஆரப்பா புலத்தியனே உனக்கீடய்யா அறுபத்து நாலுமிந்தச் சுத்திபண்ணே. 254

பண்ணடா காந்தமது பலந்தானொன்று பாங்கான கெவுரியது பலந்தா னொன்று, கண்ணடா பழச்சாற்றால் நாலுசாமங் கட்டாக வேயரைத்து வில்லைசெய்து, விண்ணடா குகையிலிட்டுக் காரம்போட்டு மேலோடு மூடி யே சீலைசெய்து, நண்ணடா துருத்திகொண்டு ஊதியூது நலமான காந் தமது மணிபோலாமே. 255

மணியான காந்தமணி பலந்தானொன்று வாகான சூதமொன்று கெந்தி ரெண்டு, தணியான பொற்றலையின் சாற்றாலாட்டு தப்பாம லறுசாமம் வில்லைசெய்து, தணிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு தூடிகொண்ட செந்தூர மாகப்பின்பு, வணியாக வஞ்சுதரம் பொற்றலையின்சாற்று லாட் டியே வில்லைசெய்து புடத்திற்போடே. 256

போடப்பா பழச்சாற்றிற் புடந்தானென்று புகழான காந்தமது செந்தூரந்தான், ஆடப்பா அரிதார நீறுகூட்டி யப்பனே குன்றியிடை தேனிற் கொள்ள, வாடப்பா பிளவையொடு சூலைவாய்வு மண்டைநோ யொடுகண்ட மாலைதீருஞ், சாடப்பா அரையாப்புப் பவுந்திரமுந்தீருஞ் சத்தமடா சூதபற்பந் தன்னைச்சேரே. 257

சேரடா ஒன்றாக்கித் தின்றாற்கேளு செத்துதடா லிங்கபுற்று யோனிப்புற்று, பாரடா கிரந்தியொடு இந்திரகண்டி பறக்குமடா நோயெல்லாம் பாருபாரு, சாரடா பூநாகம் பாலிற்போட்டுத் தண்ணிவிட்டுக் கழுவிப் பாண்டத்திலிட்டு, நீரடா வற்றிடவே வறுத்துப்போடு நேசமாம் பொன்னிறம்போற் பதத்தைக்காணே. 258

காணப்பா பூநாகம் சூரணித்துக் கட்டாகத் திப்பிலியும் சூரணித்து, ஊணப்பா ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு உத்தமனே நறுந்தேனிற் காசிடைதானிட்டுப், பேணப்பா பற்பயது குன்றிகூட்டிப் பிலப்படவே மூன்றுநாள் கொள்ளும்போது, தோணப்பா நோய்முன்னா லெடுத்தநீராக் தோன்றிவந்த க்ஷயமெல்லாம் சுழன்றுபோமே. 259

சுழன்றுதடா வப்பிரக பற்பத்தாலுந் துடியான சொர்ணத்தின் பற்பத்தாலுங், கழன்றுதடா தீராத க்ஷயங்களெல்லாங் காடுறைந்து போச்சுதடா தங்கத்தாலே, உழன்றுவரும் நோயெல்லாம் ஒழிந்துபோகும் உலைமுகத்திற் றுரும்பையிட்ட வாறதொக்குந், தழன்றுதடா நீர்வற்றிச் சயமே தீருஞ் சாற்றுகிறேன் வாதத்தின் தயிலங்கேளே. 260

## வாதத்தின் தயிலம்.

கேளப்பா வேப்பெண்ணெய் படிதான்நாலு கெடியான வாறுதிங்கள் காடி படிநாலு, வாளப்பா பழசசாறு படிதான்ரெண்டு மகத்தான குமரிச்சாறு படிதானென்று, வேளப்பா மயிலிறகு பலந்தானென்று வெள்ளைச்சாரணையின்வேர். பலந்தானென்று, நாளப்பா வச்சிரவல்லி வேர்பலந்தானென்று நாறியதோர் கரந்தைச்சாற் றரைத்துப்போடே. 261

போடப்பா வேப்பெண்ணெய்க் குள்ளேநீதான் புகழ்தேவ தாரமொடு கருக்குமூலம், நாடப்பா திரிகடுகு வோமங்காயம் நலமாக வகையொன்று பலமுங் கால்தான், சூடப்பா மூலைப்பாலி லரைத்துப்போட்டு சுத்தகமலாக்கினியாய்த் தீயைமூட்டு, தேடப்பா பதம்பார்த்து வடிவேப்பெண்ணெய் செகமெல்லா மெய்த்தகறு நெய்யாங்காணே. 262

நறுநெய்தான் படிநாலுக் கொன்றாய்ச்சேரு நலமான தயிலமிது இதுக்குள்கேளு, உறுவேம்பின் பட்டையுட தயிலந்தானு முத்தமனே நாலுக் கொன்றாகச்சேரு, நிறுவிகற்பத் தோஷமெல்லாம் நீங்கிப்போகும் நினைவாகக் கண்டத்தின் கீழெல்லாந்தான், அறுதியாய்ப் பூசவாத மெண்பத்தோடும் அப்பனே முடக்கினகால் தேறும்பாரே. 263

தேறுமடா காசிடைதான் தயிலந்தன்னில் தேனுமொரு காசிடைதான் கூடக்கூட்டி, ஆறுமடா சீனிவெரு கடிதான்கூட்டி யப்பிரக செந்தூரங் குன்றிகூட்டி, ஊறுமடா மூன்றுநாள் கொள்ளும்போது உத்தமனே வாதமெல்லா மொழிந்துபோகும், மாறுமடா இதைவிட்டுத் தயிலந்தன்னில் மால்தேவி பற்பமொடு சூதங்கூட்டே. 264

சூதபற்பந் தன்னுடனே மண்டலமே கொள்ளு துடியான பதினெட்டுக் குட்டம்போகும், வாதத்திற் பித்தநீர் தானுமேகும் மயங்காதே சுறுக்கிதடா வேப்பெண்ணெய்க்குள், ஆதிமுன்பே யிருந்தகைப்பும் போக்கினோரார், அதினுடைய வாசத்தைத் தீர்க்கிறவரார் வேதாந்தப் புலத்தியனே, உனக்காய்ச்சொன்னேன் மீறுகற்ப தோஷமெல்லாம் விழலாய்ப்போமே.

சவுரித்தயிலம்.

போமப்பா குட்டங்கள் வாதம்போகப் புகழாகச் சொல்லுகிறேன் புலத்தியனேகேளு, நாமப்பா சவுரியது பலந்தானூறு நாட்டினேன் கெந்தியது பலந்தான் பத்து, ஓமப்பா காட்டுள்ளிக் கிழங்குபத்து உத்தமனே வெள்ளாட்டுப் புழுக்கைபத்து, வேமப்பா கார்த்திகையின் கிழங்குபத்து வெள்ளைச்சா ரணையின்வேர் பலந்தான்பத்தே. 266

பத்தப்பா பிரம்பினுட கிழங்குபத்துப் பாங்காக ஒன்றாக்கிப் பூத்தயிலம் வாங்கிச், செத்தப்பா போனபிணந் திரும்பிப்பேசும் திரமான குருநீற்றின் செய்கையாலே, மெத்தப்பா வோடாதே குருவைநீயும் மீறுகின்ற தயிலங்கள் வடிக்கும்போது, ஒத்தப்பா சொல்லுகிறே னூற்றுக்கொன்று ஓட்டினால் தயிலமது உறுதியாமே. 267

உறுதியாம் தயிலமது மேலுக்குப்பூசி வொருபோதும் வாதமெல்லா மோடிப்போகும், உறுதியாய்ச் சூதபற்பம் தாம்பிரபற்பம் உத்தமனே தயிலந்தேன் சீனிகூட்டி, உறுதியாய் மண்டலமே கொண்டபோது ஓடுமே வண்டுகடி குட்டமெல்லாம், உறுதியா யிருந்தகடி யெலிகடிநீர்ப்புண்கள் ஓகோகோ தீருமடா உண்மைதானே. 268

உண்மைதா னெள்ளெண்ணெய் படிதானெட்டு உத்தமனே வேப்பெண்ணெய் படிதானொன்று, உண்மையா யேரண்டத் தெண்ணெய்படிரெண்டு உருமையுள்ள தேங்காய்நெய் படிதானொன்று, உண்மையாய்க் கொப்பரைக்குள் ளொன்றாய்வார்த்து உமுரிச்சா றொருபடிதான் கூடவிட்டு, உண்மையாய்ச் சந்தனத்தூள் பலந்தானஞ்சு உயர்தேவ தாரமது பலந்தானென்றே.

ஒன்றாக யெண்ணெய்க்குள் கலந்துபோடு ஓமம்சீ ரகம்மதுரம் கறுக்கு மூலம், நன்றாகத் திரிகடுகு கொத்தமல்லி நாகப்பூ செண்பகப்பூ காமப்பூவும், ஒன்றாகப் பச்சையொடு பேய்ப்புடல் பேய்ப்பீர்க்கு விளங்கவே கையொன்று பலமுங்கால்தான், சென்றாட்டு பழச்சாற்றா லரைத்துப்போடு சேரவே மெழுகுபத மாகக்காய்ச்சே. 270

காய்ச்சவே ஆவின்பால் படிதான்ரெண்டு கரிசாலைச் சாறுமொரு படி தான்விட்டுப், பாய்ச்சிடவே செவ்விளநீர் படிதான்நாலு பழச்சாறு படி யொன்று கொச்சிச்சாறு, வாய்ச்சுதே படியொன்று மேனிச்சாறு மறுபடி யும் செருப்படிச் சாறுபடியொன்று, தாச்சியே படியொன்று நெல்லிச் சாறு தப்பாமற் கூட்டியே வடித்திடாயே. 271

வடித்திடுவா யெண்ணெய்தனைக் கலசத்துள்ளே வாகாகக் கற்பூரம் சவ் வாதுகூட்டி, பொடித்திடுவா யாவின்கோ ரோசனை கஸ்தூரி புகழான குங்குமப்பூ வகையொன்றுக்கு, முடித்திடுவாய் கழஞ்சியொன்று எண்ணெய் வாச முகத்திலே பட்டவுடன் வாசமீறி, நொடிக்குமுன்னே சர்வாங்க நோய்கள்போகும் நொய்தான வாசவெண்ணெய் தயிலந்தானே. 272

தானென்ற நோயெல்லா மொழிந்துபோகும் தற்பரமாம் பூநீறு வடி கலசத்துள்ளே, வேனென்ற காசிடைதான் போட்டதாலே விதமப்பா இந்தவெண்ணெய் சித்தர்க்காகும், பாயென்றால் பாயுமடா நோயைக் கொல்லப் பறந்துபோய் வெட்டுமடா கபாலவாய்வைத், தாயென்று லிந்த வெண்ணெய்ச் சர்வாங்கம்பூசித் தலையிலே தேய்த்தவுடன் முழுகுவாயே.

முழுகிவருஞ் சித்தருக்குச் சொல்லக்கேளு மெய்யெல்லாம் லெட்சு மியின் காந்தியாகும், உழுகவே யெண்ணெயிது கபாலந்தேய்க்கில் உத்த மனே பசும்பயறு சியக்காயாம், நழுகாத தசையிலுள்ள தோஷம்போகும் நன்றாகத் தேகத்தில் வலியோஇல்லை, விழுகுதடா நோயெல்லாம் நமனும்வாரான் மெய்பொய்யா மென்றவனை மிதியடியால்சாடே. 274

சாடப்பா லோகத்தில் பசாசுதன்னைச் சாதிக்க மாட்டாத லோகத்தோ ரைச், சாடப்பா சித்தாந்தக் கிரிகையோரைத் தள்ளுபுழுக் குழியில் சண் டாளரைத்தான் சாடப்பா மாயைகொண்ட உலுத்தரைத்தான் சாராத வேதாந்தந் தட்டினோரைச், சாடப்பா பூரணத்தி னேக்கங்காட்டிச் சண் ணடா ஞானவாள் கொண்டுவெட்டே. 275

வெட்டென்று சொன்னீரே குருவேஅய்யா மேதினியோர் சித்தாந்த விளக்கமல்லோ, வெட்டென்று சொன்னீரே லோகத்தோரை வேதாந்தந் தானுரைக்கச் சித்தாய்ப்போமே, வெட்டென்று சொன்னதுதா னெவரை மைந்தா வேதாந்தந் தனைப்புகழ்ந்து மதியாதாரை, வெட்டென்றே னவனு டைய பரவந்திர வெகுசுறுக்காம் புலத்தியனே விள்ளக்கேளே. 276

நீற்றினதிராவகம்.

விள்ளக்கேள் நாயுருவி தாழையுப்பு மேனியுப்பு வேதையுப்பு வாழை யுப்பு, விள்ளக்கேள் தேனுப்பு வெள்ளெருக்கினுப்பு விடமான வமுரியுப்பு கள்ளியுப்பு, விள்ளக்கேள் வெடியுப்பு பலமோபத்து விதமான சீனமொ ன்று சவுட்டுப்பேரடு, விள்ளக்கேள் பலமொன்று வகைதானப்பா வெண் காரம் பலமிரண்டு கல்லுப்பொன்றே. 277

ஒன்றான பூநீறு சாரஞ்சுடன் ஒகோகோ துரிசுஅன்ன பேதிவெள்ளை, நன்றாக வகைக்குஅரைப் பலமேகூட்டு நாடேறி கிளிஞ்சியது சுத்திபண்ணி வென்றதொரு சிப்பியது பலமுங்கால்தான் விசைபடங்கக் கல்வத்திற் பொடித்தொன்றாக்கிச், சென்றுடுங் குப்பியிலே நிநிர்வாங்கு சித்தர்மெய்த்த நீரப்பா செப்பொணாதே. 278

ஒன்றான நீரசலே தங்கம்நீறும் உத்தமனே வெள்ளிமுதல் வங்கம்நீறும், நன்றான நாகமுதல் லோகம்நீறும் ரசமோடு காந்தம்பலகரையும் நீறும், பன்றான நவரத்தினம் வெவ்வேறேநீறும் பாஷாணச் சரக்கெல்லாம் படுமுன்னீறுந், தன்றான வுபரசங்கள் தானேநீறுந் தருகற்பத் தால்வருநோய் தள்ளக்கேளை. 279

கேளடா சலபமிது நீநீரென்றால் கேட்குமடா சரக்கெல்லாஞ் செந்தூரந்தான், நாளடா பிலத்திருந்த தேதுவென்று நாடிப்பா ரிதனாலே சத்துத்தானும், வேளடா விந்நீரை முன்னீர்செய்து வேண்டியதோர் செந்தூரஞ் சொன்னதெல்லாம், ஆளடா சத்துவகைத் தங்கங்கூட்டி அப்பனே அறிவறிந்து பற்பஞ்செய்யே. 280

செய்யடா குருநீருஞ் செயநீருஞ்சொன்னேன் திறமான பூவினுட குருநீறுஞ் சொன்னேன், செய்யடா தைலமுழுக்குத் தயிலஞ்சொன்னேன் செந்தூர வகைமுறைகள் சேரச்சொன்னேன், செய்யடா வாதத்தின் குருவுஞ்சொன்னேன் தெளிவான லேகியங்கள் கிருதஞ்சொன்னேன், செய்யடா வாதிமகன் கற்பங்கொண்டால் தேகமடா வயித்தியத்திற் றிறவுகோலே. 281

திறவுகோல் கைக்கொடுத்தே னறிவுள்ளோர்க்கே தேசத்தோர் வயித்தியத்தில் திரம்போதாது, பிறவாத நெறியோர்க்கு வயித்தியமுஞ் சொன்னேன் பிறந்திறக்கும் பாவிகட்கோ வெளிவிட்டேனேன், அறமான வாதிமகன் மனந்தெளிந்து ஆசைவைக்கப் பேரின்பத் தடுத்தோனாகில், உறவாகப் புலத்தியனே புத்திசொல்லி யுரைத்திடுவாய் கற்பந்தான் யோகத்தோர்க்கே.

யோகமெல்லாம் ஞானத்துக் காதிபீடம் யோகத்துக் காதியடா கிரியையாகும், வாகான கிரியைக்குச் சரிதைமூலம் வளமான சரியையென்னவென்றுகேளு, தாகான குண்டலியி னாத்மாவீசன் சகலருக்குஞ் சரியைமுறை தப்பாவண்ணம், ஏகமாய்க் கீழ்முக்கோ ணத்துள்ளாகி யிருந்தவிடமறியார்க ளூலுத்தர்தானே. 283

தானென்ற சரியைவிட்டுக் கிரியையென்ன சாற்றக்கேள் புலத்தியனே மூலந்தன்னில், தானென்ற குண்டலிக்குள் சத்திதன்னைத் தானன்றே பூசித்தால் கிரியையாகும், தானென்ற யோகந்தா னென்னவென்றால் தப்பாத நந்தியுட மூலத்தன்னில், தானென்ற மனங்கூடி வாசிபார்க்கில் சதாசிவனும் யோகத்தைத் தாக்கிப்பாரே. 284

பாரப்பா வாசியினால் யோகமாச்சு பரிவான ஞானமென்ன வென்று கேளு, நேரப்பா தன்னையறிந் துண்மைகண்டு நிலையான தலைவனாய்ப் பரத்திற்சேர்ந்து, ஆரப்பா வறிவாலே பூரணத்தைக்கண்டு வம்பலத்தே நடம் புரிந்தால் ஞானமாகும், பேரப்பா விதுவல்லோ சாலோக சாமீபம் பெருத்தசா ரூபசா யுச்சியமாச்சே. 285

ஆச்சடா மனம்புத்தி ஆங்காரந்தான் அரகரா சித்தத்தி லடங்கியேதான், போச்சடா தீட்சைவிதிக் குள்ளேபுக்கிப் புதல்வனே புலத்தியனே யென்ன சொல்வேன், நீச்சடா ஞானமென்ன வாய்ப்பேச்சாலே நிலைக்குமோ சித்தாந்த நெறிகொண்டோர்க்கு, மூச்சடா ஓடுவத மொடுங்குவதுங் காணான் மூனையறியா முழுமாடு உலுத்தர்காணே. 286

காணப்பா சண்டாளப் பீசத்தேதான் சனிவாகச் செனித்ததொரு பாவியோர்க்குத், தோணவே வேதாந்தஞ் சொன்னாலுந்தான் சூட்சத்தைப் பார்த்தறியான் மாயைமூடி, ஆணவமாய்க் கழிவதல்லால் வேறொன்றில்லை யாசைகொண்டு பேச்சுரைப்பார் கழுதை மாண்பர், வீணான பிள்ளைகளைச் சேர்க்கவேண்டாம் விட்டகுறை யுண்டானால் வருவான்பின்னே. 287

வருகாது ஒருநாளுஞ் சொன்னாலுந்தான் வாய்க்குமோ விட்டகுறை யில்லாவிட்டால், உருகாது ஞானத்தி னுண்மையாகி உத்தமனே மனம் வேறா யோடிப்போகும், பெருகாது வேதாந்தஞ் சித்தாந்தத்துள்ளாய் பேய்மக்க ளிறந்தார்பூ ரணநோக்காமல், அரிதாகும் விட்டகுறை வாய்ப்புக் கேளு அப்பனே வாசிகொண்டா லறிந்துபாரே. 288

பாரப்பா மதியிரவி யிரண்டுக்குள்ளே பகர்ந்தோடும் ஞானவரை சரத்தைப்பார்க்கில், நேரப்பா யிடைகலையில் பெண்ரூபமாகும் நெறியான பிங்கலையி லாண்ரூபமாகும், ஆரப்பா அந்திடத்திற் பஞ்சபூதம் அசைகொண்டு வாடுமங்கே கெடியாரந்தான், சேரப்பா நாழிகைதா னொன்றேபாயும் தெளிவான பிரிதிவியில் நூற்றிருபத்தாமே. 289

பத்தான அப்புவிலே கடிகையொன்று பாயுமடா தேயுவிலே கெடியாரங்கேள், சித்தான தொன்றேகால் வாய்வுக்கேதான் செப்பக்கேள் ஒன்றரைதான் கடிகையாகும், மூத்தான வாகாசத் தொன்றேமுக்கால் முழுதுமிதிற் கடிகையா மோசமில்லை, பெற்றதுதா னிதுக்குள்ளே விட்டகுறை மார்க்கம் பேரின்பம் பூரணசூஸ் திரத்திற்காணே. 290

காணப்பா சரியையுட புத்திதோணும் கருதிப்பார் கிரியையுட புத்திதோணும், பூணப்பா பேரேது யோகமார்க்கம் புத்திமா னென்பதெல்லாங் காணலாகுந், தோணப்பா ஞானத்தின் புத்திகாணுஞ் சொற்றிறமாய் மாத்திரையின் பலங்கள் சொன்னேன், பேணப்பா பூரணசூஸ் திரத்தைப் பாரு பேயான மனந்தேறும் பிதற்றிலாதே. 291

பிதற்றில்லா சூத்திரமிரு நூறும்பாரு பேசுமடா பூரணத்தின் நூலைச் சொன்னேன், பதைப்படங்கு மூலமதில் நன்றாய்ச்சொன்னேன் பரிபாஷை யில்லையடா யானுஞ்சொன்னேன், அதைத்தானே சோதிக்கச் சட்டமுனிநாத ஞட்டியதோர் கண்டினுட சூஸ்திரத்திலேதான், விதைத்தானே மூலத்தின் கருவைக்கொட்டி மேலாறு தாரமொடு வாசிதானே. 292

வாசியொடு லட்சியமுஞ் சக்கரமுஞ்சொல்லி வாதத்தின் கருக்களையும் வளமாய்ச்சொல்லி, நேசமுட னேயுரைத்தார் ஒத்துப்பாரு நிலையான பூரணசூஸ் திரத்திற்ருேணும், வாசமுடன் ரோமரிஷி யைம்பதுக்குள் மகத்தான மூலத்தின் வழியேசொன்ஞர், பேசிடுங்காண் மச்சமுனி நிகண்டுதீட்சை பேரின்ப ஞானமொரு நூலாற்காணே. 293

நூலிலே திருமூல ரைநூறுஞ்ஞுக்குள் நுழைந்தங்கே பார்த்தவர்க்கு ஞானந்தோணும், காலிலே கால்மூட்டிக் கண்ணைக்காட்டிக் கருத்துறவே யோகவெளி கட்டாய்ச் சொன்ஞர், சேலான வாதார மாறும் நன்றாய்ச் செப்பிஞர் வாசிவைத்துத் திறம்பய்ப்பார்க்க, மாலான மாயைவிட்டுத் துறவிற்சென்று வழ்பாடு கண்டறிந்து குருவைப்போற்றே. 294

குருவினுட பதம்போற்றி மூலங்கேளு குறிப்பான பூசைவிதி தன்னைக் கேளு, குருவினுட பதம்போற்றி யாதாரங்கேளு கோலமாஞ் சக்கரத்தின் குறிப்புக்கேளு, குருவினுட பதம்போற்றி லட்சியத்தைக்கேளு கோலங்கள் மிகவெடுத்த ஆத்துமாக்கள், குருவினுட பதம்போற்றித் தன்னைக்காணுங் குண்டலியின் குறிப்பைக்கேள் மூனையைக்கேளே. 295

கேளப்பாபுலத்தியனே சொல்லக்கேளு கெடியான பரங்கடந்தால் தலைவனுவான், கேளப்பா குருவினடி தொழுதுநின்று, கெட்டியாய்ச் சிவ பூசை மார்க்கத்தன்னைக், கேளப்பா சொன்ஞர்பின் தேவிபூசை கிருபை வைத்துச் சொன்ஞக்கா லறிந்துபூசி, கேளப்பா பூசைவிதி தப்பாவண்ணம் கெட்டியாய் மவுனத்தின் கிரியைகேளே. 296

கிரியைவிட்டு யோகத்திற் சென்றுகூடி கேசரியில் மனம்வைத்து மூட்டுங்காலை, அறிவான மவுனத்தே வாசியூது அப்பாபின் சிவதீட்சை சத்தி தீட்சை, பிரிவாக யிருகாலம் வைத்தூது பேரான குளிகையிட்டுப் பேருண்டாகச், செறிவாக மூதண்ட லேகியங்கொள்ளு திட்டமாய் வழலைதள்ளிக் கற்பங்கொள்ளே. 297

கற்பங்கள் கொள்வதிலே மூலிகற்பம் கைக்கடங்கா நோய்களறும் காலம்பார்த்து, நிற்பமென்றே நோய்பிளக்கும் நோய்கட்கெல்லாம் நெஞ்சிலே கூட்டுதற்கு வயித்தியஞ்சொன்னேன், அற்பமென்று சொன்ஞக்கா லெல்லாம்பாழாம் அறிவோடே கற்பமது கொள்ளும்போது உற்பனமா யுறுதிதருஞ் செந்தூரந்தான் உற்றதொரு லேகியங்கள் கிருதஞ்செய்யே. 298

செய்யப்பா தயிலங்கள் சூரணங்கள் செயமான பூபதிகள் கற்பத்தோடு, செய்யப்பா கற்பத்தைக் கொள்ளுமுன்பே திறமாகச் செய்துவைப்பாய் தவ ருவண்ணம், செய்யப்பா வயித்தியத்தி லாயிரத்துக்கொன்றாய் செப்பி னேன் வயித்தியம்யான் யென்னசொல்வேன், கையைப்பார் முகத்தைப்பார் தசநாடியைப்பார் கருச்சொன்னேன் பதிணயி ரத்திற்கானே. 299

காணப்பா பார்த்துணர்ந்த வாதிமக ஞானற்கைவண்ணந் தப்பாமல் வயி த்தியஞ்செய்வாய், தோணப்பா வடுகனுட பூசைசெய்வாய் சொற்குருவை மறவாதே லட்சியத்தினுள்ளே, பேணப்பா நந்திகுரு உபதேசத்தாற் பே சாதே சூட்சமாய்ப் பேணிப்பாரு, ஆணவத்தை விட்டல்லோ கற்பங் கொண்டால் ஆகாகா சங்கென்று மூலந்தானே. 300

மூலத்தி னெழுத்தாலே மவுனங்கொண்டு மூட்டினால் வடுகனங்கே நிரு த்தஞ் செய்வான், ஆலத்தின் குண்டலிக்கு ளடுக்கப்பாரு ஆசையவன் வைப்பதற்கு வடமாலைசாத்து, சீலத்தி னந்தியுட பூசைபண்ணு செயகண்டி நாதவொலி மணியினோசை, காலத்தின் கருவறிந்து பூசைசெய்தால் கைக் குள்ளாம் வயித்தியமுந் நூறுமுற்றே. 301

அகஸ்தியர் செந்தூரம் முந்நூறு
முற்றிற்று.

உ

# அட்டவணை.


| பாட்டு நம்பர். | வியரம். | பக்க நம்பர். |
|---|---|---|
| 2 | நூல் | 1 |
| 31 | கர்பூரசலாசத்து | 7 |
| 35 | அப்பிரகச்சத்து | 8 |
| 44 | நிமிளைச்சத்து | 9 |
| 48 | நிமிளைச்செந்தூரம் | 10 |
| 55 | தாளகநீறு | 11 |
| 57 | சூதபற்பம் | 11 |
| 67 | அண்டச்சத்து | 12 |
| 73 | சயரோகத்திற்கு லேகியம் | 13 |
| 95 | பவளவங்கச்செந்தூரம் | 16 |
| 98 | அயச்செந்தூரம் | 17 |
| 100 | துருசுச்செந்தூரம் | 17 |
| 102 | அயக்காந்தசெந்தூரம் | 17 |
| 104 | பாண்டுலேகியம் | 18 |
| 109 | மண்டூரச்செந்தூரம் | 18 |
| 114 | வெண்கலச்செந்தூரம் | 19 |
| 116 | முத்துச்செந்தூரம் | 19 |
| 118 | தாளகச்செந்தூரம் | 20 |
| 132 | நவசிந்தாமணி | 22 |
| 134 | அயக்காந்தச்செந்தூரம் | 22 |
| 139 | வெள்ளீயச்செந்தூரம் | 23 |
| 146 | வயித்தியமுறைமை | 24 |
| 150 | கிளிஞ்சிற்சுன்னம் | 24 |
| 173 | துளசிலேகியம் | 28 |
| 178 | நாகச்செந்தூரம் | 28 |
| 186 | வங்கச்செந்தூரம் | 29 |
| 194 | வெள்வங்கச்செந்தூரம் | 31 |
| 203 | சுயமாக்கினிகுமாரம் | 32 |
| 208 | ஆனந்தவயிரவன் | 33 |
| 212 | சூதபற்பம் | 33 |
| 217 | வயிரபற்பம் | 34 |
| 230 | மண்டூரச்செந்தூரம் | 36 |
| 233 | நவலோகச்செந்தூரம் | 36 |
| 237 | ராஜபூபதி | 37 |
| 242 | நாகபற்பம் | 37 |
| 244 | கெந்தகச்செந்தூரம் | 38 |
| 251 | சரக்குகள்சுத்தி | 39 |
| 261 | வாதத்தின்தயிலம் | 40 |
| 266 | சவுரித்தயிலம் | 41 |
| | நீற்றின்திராவகம் | 42 |

# விளம்பரம்.

இதற்குமுன் எவராலும் அச்சிட்டு வெளிவராததும் ஓலையேட்டுப்பிரதியினின்றும் எடுத்தெழுதப்பட்ட இதனடியிற்கண்ட அரிய சாஸ்திரங்களைச் கூடியசீக்கிரம் அச்சிட்டு வெளிப்படுத்தக்கூடும்.

அவையாவன:—

| | |
|---|---|
| தேரையர் ரசவர்க்கம் | 1500 |
| ஷை கருக்கடைவைத்தியம் | 1000 |
| ஷை யார் பரிபூரணம் | 550 |
| நந்தி ஈஸ்வரர் நிகண்டு | 300 |
| ஷையார் தர்க்க பரிபூரணம் | 300 |
| பாலையானந்தர் வைத்தியம் | 1000 |
| கொங்கணர் முதற்காண்டம் | 500 |
| ஷையார் கடைக்காண்டம் | 500 |
| பிர்மமுனி வைத்தியம் | 700 |
| கருவூரார் வாதகொண்டி | 700 |
| மச்சமுனிவகாரம் | 800 |
| ஷை வேதாந்த பெருநூல் | 800 |
| யாகோபு வைத்தியம் | 750 |
| ஷையார் செந்தூரம் | 350 |
| ஷையார் சுண்ணம் | 300 |
| ஷையார் வைத்திய சுருக்கம் | 150 |
| இராமதேவர் குருநூல் | 200 |
| ஷை நிகண்டு | 550 |
| ஷையார் ஜாலம் | 800 |
| உரோமரிஷி பரிபாஷை | 300 |
| ஷையார் கருக்கடை | 500 |
| ஷையார்இரண்டடிவைத்தியம் | 500 |
| பூஜிமுனிவர் கும்மி | 1000 |
| ஷையார் வாதகாவியம் | 1000 |

| | |
|---|---|
| அகஸ்தியர் ஞானசௌமியம் | 1200 |
| ஷையார் கர்ம சூஸ்திரம் | 300 |
| ஷையார் வைத்திய காவியம் | 1000 |
| ஷையார் மந்திர காவியம் | 1000 |
| ஷையார் சத்தி ஜாலம் | 1200 |
| ஷையார் பரிபாஷை | 300 |
| ஷையார் குருநூல் | 600 |
| ஷையார் 12 காண்டஜாலம் | 192 |
| ஷையார் பரிபூரணம் | 1200 |
| ஷையார் ஞானகாவியம் | 1000 |
| ஷையார் இந்திரஜாலகாண்ட | 1200 |
| ஷையார் ஆறுகாண்டஜாலம் | 1200 |
| ஷையார் எழுகாண்டஜாலம் | 1200 |
| ஷையார் திவாகரம் தொகுதி | 12 |
| ஷையார் தர்க்கசாஸ்திரம் | 300 |
| ஷையார் தத்துவம் | 300 |
| ஷையார் இடைபாகம் | 400 |
| ஷை வாலை பரிபூரணம் | 400 |
| ஷையார் கவுமதிநூல் | 400 |
| ஷையார் நிகண்டு தொகுதி | 12 |
| சுப்பிரமணியர் வைத்தியம் | 1500 |
| ஷை விஞ்சை | 1000 |
| ஷை பச்சணி | 300 |
| தன்வந்திரிநாலுகாண்டஜாலம் | 800 |

அச்சிட்டுத் தயாராயிருக்கும் புத்தகங்கள்.

| | |
|---|---|
| இராமதேவர் சிவயோகம் | 200 |
| சுப்பிரமணியர் | 500 |
| ஷையார் ஞானம் | 200 |
| அகஸ்தியர் பூரணம் | 205 |
| ஷை வைத்தியரத்தினச் சுருக்கம் | 360 |
| ஷையார் பூரணசூத்திரம் | 216 |
| ஷையார் செந்தூரம் | 300 |
| ஷையார் அமுர்தகலைக்கியானம் | 1200 |
| ஷையார் பரிபாஷை | 300 |
| சட்டைமுனிவர்ஞானம் | 200 |
| பிர்மமுனி வைத்தியம் | 380 |

| | |
|---|---|
| புலிப்பாணிவைத்தியம் | 500 |
| கெருடாரூடம் கெருடபஞ்சாட்சர ஆரூடம் சத்தியாரூடம் | 300 |
| சிவாஆரூடம் தேவியாரூடம் நாகராரூடம் | 300 |
| சித்தராரூடம் சற்பஆரூடம் மந்திராரூடம் | 300 |

பரிபாஷை வைத்திய அகராதி பதினெண்சித்தர் வைத்தியவாத யோக ஞான சாஸ்திரம் 9 பாகம் வரை அச்சிட்டிருக்கிறது விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இ. ராம. குருசாமிக்கோனார்,

புத்தகஷாப் புதுமண்டபம் மதுரை.